12th
November
2023

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 05 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com









விளையாட்டின் விதியில் விளையாடும் ராஜதந்திரம்!

## வரவு செலவுத் திட்டம் நாளை சமர்ப்பிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

## ஹமாஸ் ஹிஸ்புல்லாஹ் தாக்குதலில் நிலை குலையும் இஸ்ரேல்

### பதிலுக்கு காஸாவில் இஸ்ரேல் கண்மூடித்தனமான தாக்குதல்

அஷ்ஷிபா வைத்தியசாலையில் 39 குழந்தைகள் ஒட்சிசன் இன்றி இறந்த செய்தி சர்வதேச சமூகத்தில் பலத்த அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

02ம் பக்கம்பார்க்க...









## முஸ்லிம் நாடுகள் ஒன்றுபட்டால் பிரச்சினைக்கு தீர்வு காணலாம்

### ஈரான் ஜனாதிபதி இப்றாஹிம் ரைஸி

காஸாவில் நடைபெற்று வரும் போர் குறித்து ரியாத் உச்சி மாநாட்டில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி தனது உரையை முடித்துள்ளார்.

அவர் கூறியதன் சுருக்கம்:

காசா மீதான கண்மூடித்தனமான குண்டுவீச்சு

02ம் பக்கம்பார்க்க...



## காஸா தாக்குதல்களில் தலையிடுங்கள்





- 153 எம்.பிக்கள் ஐ.நா.வுக்கு கடிதம்
- மஹிந்த - மைத்திரி உள்ளிட்ட எம்.பிக்கள் கைச்சாத்து
- பாராளுமன்றில் றிஷாட் கருத்து

03ம் பக்கம்பார்க்க...

## இனியும் பொறுக்க முடியாது தாக்குதல்களை நிறுத்துங்கள்

### சவூதி மாநாட்டில் இளவரசர் சல்மான் வலியுறுத்து



சவூதி ரியாத்தில் இளவரசர் முஹம்மது இப்னு

02ம் பக்கம்பார்க்க...

## ரொஷானை பதவி விலக்கினால் நாமும் பதவி துறப்போம்

### ஐந்து அமைச்சர்கள் எச்சரிக்கை

கிரிக்கெட் தொடர்பாக உருவாகியுள்ள நெருக்கடிக்கு மத்தியில்

02ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## ஹமாஸ்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தற்போது சவூதி அரேபியாவில் நடைபெற்று வருகின்ற அரபு - இஸ்லாமிய நாடுகளுக்கிடையிலான உச்சி மாநாட்டில் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென்பதில் கவனமாக இருந்தாலும் சில அரபு நாடுகளும், துருக்கியும் இஸ்ரேலுடனான உறவை துண்டித்தல், அதேபோல் இஸ்ரேலுக்கான எண்ணெய் வழங்குவதைத் தடுத்தல் மற்றும் சில தூதுவர்களை வெளியேற்றுதல் போன்ற தீர்மானங்களை முன்வைத்தாலும் கூட, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், மொரோக்கோ, எகிப்து போன்ற நாடுகள் அதனை எதிர்த்துள்ளன.

இதேவேளை அங்கிருந்து கிடைக்கும் செய்திகளின்படி, இந்த மாநாடு எந்தவிதமான உருப்படியான தீர்மானமும் எடுக்காமல் முடிவடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக நம்பப்படுகின்றது.

இதேவேளை நேற்றிரவு ஐந்து இடங்களில் கடுமையான தாக்குதல்களை ஹமாஸ் ஆரம்பித்துள்ளது. இதன் விளைவாக இஸ்ரேலிய தரப்பில் முக்கிய இராணுவ அதிகாரி உட்பட பலர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல் அஷ்ஷிபா வைத்தியசாலை, இந்தோனேஷிய வைத்தியசாலை மற்றும் அந்நஸ்ர் வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகள் மீது கடுமையான குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டதில் பலர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை அந்நஸ்ர் வீதியில் சிதைவடைந்த யுத்தத் தாங்கிகளுடன் இஸ்ரேலிய படைவீரர்களின் உடல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த 18 மணி நேரமாக கடுமையான மோதல் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சற்றுமுன்னர் ஹமாஸ், ஒரு கட்டிடத்தில் தங்கியிருந்த இஸ்ரேல் படையினரை நோக்கி தாக்கும் காணொளியை வெளியிட்டிருக்கின்றது. இவ்வாறான காணொளிகள் இஸ்ரேலிய சமூகத்துக்குச் செல்கின்ற போது அதனால் பலத்த பாதிப்பு ஏற்படுமென்று இஸ்ரேல் அஞ்சுகிறது. இதேநேரம் தென் லெபனானிலிருந்து வட இஸ்ரேலை நோக்கி தொடராக தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஹிஸ்புல்லா கெரில்லாக்கள் அல்லது இஸ்ரேலிய போராளிகள் நடாத்திய தாக்குதல்களில் பல இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்துமிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஹிஸ்புல்லா படிப்படியாக ஆளில்லா விமானம் உட்பட முன்னர் பாவித்ததை விட ஓரளவு கன ரீதியான ஆயுதங்களை பாவிப்பதில் கூடுதல் ஆர்வம் காட்டுவதாக தெரிகின்றது. இதேநேரம் ஈராக்கிலுள்ள இஸ்லாமிய இயக்கம் அமெரிக்காவின் நிலைகள் மீது தாக்குதல் நடாத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்திருப்பதாக ரொய்டர் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம் ஹமாஸினுடைய உத்தியோகபூர்வ பேச்சாளர் அபூ உபைதா தனது கருத்தை முன்வைக்கின்ற போது, நாங்கள் எதிரிகளுடன் மிகப் பலமான மோதலில் ஈடுபட்டிருக்கின்றோம். அனைத்துத் தரப்புக்களிலிருந்தும் எதிரிகளை தகர்த்து வருகின்றோம். நாங்கள் எந்த விலையைக் கொடுத்தாவது எங்களது நிலத்தைப் பாதுகாப்போம் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காஸாவினுடைய வடபகுதியிலிருந்து தென் பகுதியை நோக்கி சில மக்கள் நகர்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த செய்திகளின் படி ஹமாஸ் அந்த மக்களை தடுக்கவில்லையென்றும், குறிப்பாக அது இராணுவப் போராட்டம் நடக்கின்ற பகுதியென்பதால் மக்களின் பாதுகாப்புக்காக அந்த இடத்திலிருந்து நகர்வது சிறந்தது என்ற கருத்தை ஹமாஸ் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சுமார் 39 குழந்தைகள் ஒட்சிசன் இன்றி இறந்த செயற்பாட்டைத் தொடர்ந்து அஷ்ஷிபா வைத்தியசாலையின் அதிகாரிகள், உலக சுகாதார ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்களை உடனடியாக தலையிட்டு வைத்தியசாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையோ, உலக சுகாதார ஸ்தாபனமோ தங்களால் ஒன்றும் செய்ய முடியாதென்று கைவிரித்துள்ள நிலையில் அந்த வைத்தியசாலையிலுள்ள அதிகாரிகள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் தொடர்ச்சியாக பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வைத்தியசாலைகள் மீது இஸ்ரேலிய தாக்குதல்கள் இடைவிடாது தொடர்ந்து கொண்டே இருக்கின்ற நிலையில், வைத்தியசாலைகளை பாதுகாக்கும் நோக்கோடு மறுபுறத்தில் ஹமாஸ் இஸ்ரேலை எதிர்த்து கடுமையாக போராடி வருகின்றது. இருந்தாலும் கூட இஸ்ரேலின் வான்வெளித் தாக்குதல்கள், ஆளில்லா விமானங்களைக் கொண்டு இடம்பெறும் தாக்குதல்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

## முஸ்லிம் நாடுகள்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

நிறுத்தப்பட வேண்டும்.

முழு இஸ்லாமிய உலகமும் ஒன்றுபட வேண்டும், இந்த ஒற்றுமையின் மூலம், நாம் பிரச்சினையை தீர்க்க முடியும்.

ஐ.நா.வில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவளித்து, பாலஸ்தீனியர்களை கொல்வதை தடுக்கும் தீர்மானங்களை வீட்டோ செய்கிறது. இஸ்ரேல் மேலும் பலவற்றைக் கொல்லவும், மேலும் குண்டுகளை வீசவும், மேலும் குண்டுகளை வீசவும் வழி வகுத்துள்ளது.

இந்த உச்சிமாநாட்டின் முடிவில் பாலஸ்தீன மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு தீர்மானத்திற்கு வர முடியும் என்று நம்புகிறேன்.

நாம் எதிர்ப்பை ஆதரிக்க வேண்டும், மேலும் பாலஸ்தீனிய எதிர்ப்பின் ஒவ்வொரு உறுப்பினரின் கைகளையும் நெற்றியையும் முத்தமிட வேண்டும்

## ரொஷானை...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை அந்த அமைச்சர் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு ரொஷான் ரணசிங்க விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால், மேலும் ஐந்து அமைச்சர்கள் தனது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அவர்களில் ஒருவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இனியும்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

சல்மான் அவர்கள் தலைமையில் உச்சி மாநாடு அவசரமாக கூட்டப்பட்டு நேற்று நடைபெற்றது.

அனைத்து இஸ்லாமிய நாடுகள் மற்றும் துருக்கி நாட்டின் அதிபர் தையிப் ரளா எர்டோகான் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அசாதாரண சூழலில் உடனடியாக கூட்டப்பட்ட இந்த உச்சி மாநாட்டில்

"இஸ்ரேல் உடனடியாக போரை நிறுத்த வேண்டும். ஃபலஸ்தீன ஆக்ரமிப்பை கைவிட வேண்டும். ஃபலஸ்தீனத்தில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் மீது கொடூரமாக நடத்தப்பட்ட அனைத்து போர்குற்றங்களுக்கும் இஸ்ரேல் பொறுப்பேற்க வேண்டும்.. "

என முஹம்மது இப்னு சல்மான் வலியுறுத்திப் பேசினார்.

"முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்படக்கூடிய தாக்குதல்களை இனியும் பொறுத்துக் கொள்ளமுடியாது. இனி இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது." என்ற கருத்துக்களை மற்ற இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

## வரவு...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இதற்கென நாளை பாராளுமன்றத்தில் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விஷேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், முக்கிய பிரமுகர்களும் இதில் பங்கேற்கவுள்ளனர். வரவு செலவுத் திட்டம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இம்மாதம் 14 -21 வரை ஏழு நாட்களுக்கு நடைபெறவுள்ளதுடன், இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 21ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை நவம்பர் 22 முதல் டிசம்பர் 13 ஆம் திகதி வரை குழு நிலை விவாதம் இடம்பெறவுள்ளது. குழு நிலை விவாதம் மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# ஏறாவூர் மீராகேணி பிரதான பாலத்தின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பித்து வைப்பு





கடந்த 40 வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று புனரமைப்புச் செய்யப்படாதிருந்த ஏறாவூர் மீராகேணி வீதியிலுள்ள பிரதான பாலத்தின் அபிவிருத்தி வேலைகள் ரூபாய் இரண்டரைக் கோடி செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சுற்றாடல்துறை முன்னாள் அமைச்சரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் மேற்கொண்ட அயராத முயற்சியின் காரணமாக இது சாத்தியமாகியுள்ளது. மீராகேணி, சத்தாம் ஹுஸைன், தளவாய் சவுக்கடி ஆகிய பிரதேச பொது மக்களுக்கு நவீன பாலம் அமைப்பு ஒரு வரப்பிரசாதமாகப் பார்க்கப்படுகிறது.

ஏறாவூர் நகரை இணைக்கும் மீராகேணி வீதியும் அதனோடு உள்ள இந்தப் பாலமும் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக புனரமைப்புச் செய்யபடாது கவனிப்பாரற்றுக் கிடந்ததால் தினமும் இந்த வீதியைப் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

சுற்றாடல்துறை முன்னாள் அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான நஸீர் அஹமட் நடவடிக்கை எடுத்ததன் பேரில் வீதி அபிவிருத்தி பெருந்தெருக்கள் அமைச்சின் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மீராகேணி வீதி பிரதான பாலத்தின் நிருமாண வேலைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை 10.11.2023 இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பொறியியலாளர் எம். சர்ஜூன், முன்னாள் சுற்றாடல் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஏ. அப்துல் நாஸர், ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர்களான எம்.ஐ.எம். தஸ்லீம், எம்.சி கபூர், தொழினுட்ப உத்தியோகத்தர் எம். பைஸல் ஆகியோரும் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



## காஸா தாக்குதலில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலின் அட்டூழியங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரஸ் அவர்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்கள் 153 பேர் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கை கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் அனைத்துக் கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை (10) பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது.

"காசா மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாகக் குண்டுகளை பொழிந்து வருகிறது. அவர்களின் ஈனச்செயல்கள் தொடர்ச்சியாக நடந்துகொண்டே உள்ளன. மனச்சாட்சியே இல்லாமல், மக்களின் குடியிருப்புகள் மீதும் வைத்தியசாலைகள் மீதும் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களின் மீதும் ஏவுகணை தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.

மேலைத்தேய நாடுகளான அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகள், இஸ்ரேலின் இந்தக் காட்டுமிராண்டி நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருந்து, தாக்குதல்களுக்கும் யுத்தத்தை தொடர்வதற்கும் ஊக்கமளித்து வருகின்றன. இதனை ஐ.நா சபை தலையிட்டு உடனடியாக நிறுத்த வேண்டும். ஐ.நா சபையில் அங்கம் வகிக்கும் 120 நாடுகள், யுத்த நிறுத்தத்தை உடனடியாகக் கொண்டுவருமாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ள போதும், இஸ்ரேல் எதையுமே பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. சண்டித்தனமாக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது" என்று கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"தேர்தல் முறைமையில் இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பது தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கொண்டுவந்த பிரேரணைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். தேர்தல் திருத்தங்களில் சிறுபான்மையினர் குறிப்பாக, தமிழ், முஸ்லிம் மலையகத்தவர்களின் விகிதாசாரம் பேணப்பட வேண்டும். அவர்களின் சனத்தொகை விகிதத்திற்கேற்ப பிரதிநிதித்துவங்கள் கொண்டுவரப்பட வேண்டும். எனவே, அவ்வாறான திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

அதேபோன்று, உள்ளூராட்சி மன்றங்களில் கடந்த பல வருடங்களாக சுமார் 8,400 ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றுகின்றனர். ஆளுநர்கள் மற்றும் இந்தத் துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள், இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என பல தடவைகள் உறுதியளித்துள்ள போதும் அது இன்னும் நடைபெறவில்லை. எனவே, ஜனாதிபதி இந்த விவகாரத்தில் தலையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கிரிக்கெட்டில் ஊழல் துஷ்பிரயோகம் தலைவிரித்தாடுவது தொடர்பில், விளையாட்டுத் துறை அமைச்சரே பாராளுமன்றில் பிரஸ்தாபித்துள்ளார். இந்த ஊழலை கட்டுப்படுத்த முடியாத கையறுநிலையையும் அவர் பகிரங்கப்படுத்தியுள்ளார். எனவே, இந்த உயர் சபையானது அவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கில் தகுதிவாய்ந்த, திறமையான விளையாட்டு வீரர்கள் உள்ள போதும், அவர்களை தேசிய அணியில் உள்வாங்க பின்னடித்து வருகின்றனர். இதற்கும் ஆக்கபூர்வமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐ.நா செயலாளர் நாயகத்துக்கு அனுப்பவுள்ள கடிதத்தின் சாராம்சத்தையும் ரிஷாட் எம்.பி சபையில் வாசித்தார்.

"பாலஸ்தீன மக்களுடன் உறுதியாக நிற்கும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களது கோரிக்கைகள் பின்வருமாறு:

1. உலக அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் முக்கிய பங்குதாரர்கள், மத்திய தரைக்கடல் பகுதியின் பிரச்சினையின் மூல காரணத்தை ஆராய வேண்டும். சரியான மற்றும் உண்மையான தீர்வை செயல்படுத்துவதன் மூலம், உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கான நடைமுறை நடவடிக்கைகளின் வழிகளைக் கண்டறிய வேண்டும். கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட 1967 எல்லைகளின் சுதந்திர மற்றும் இறையாண்மையைக் கொண்ட பாலஸ்தீனத்தை நாம் உருவாக்கி அங்கீகரிக்க வேண்டும். பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை மற்றும் நியாயமான அமைதியை அடைவதற்கான ஒரே வழி இதுவாகும். மேலும், இஸ்ரேலும் அதை ஏற்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த உலக நாடுகள் செயல்பட வேண்டும்.

2. உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், சர்வதேச சட்டங்கள் மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தமான தேவையை நிறைவேற்ற, உடனடியாகப் போரை நிறுத்தவும், பேச்சுவார்த்தைக்கு வருமாறும் நாங்கள் கோருகிறோம். பாலஸ்தீனத்தின் சுதந்திர அரசை உருவாக்குவதற்கு, சர்வதேச சமூகம் அதிகபட்சமாக தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

3. இஸ்ரேல், சர்வதேச சட்டங்கள் மற்றும் உலகளாவிய மனிதாபிமான விதிமுறைகளின் கீழ், இப்போதும் அதற்கு முன்னும் ஒரே மாதிரியான, அப்பட்டமான போர்க் குற்றத்தை மேற்கொண்டமைக்கு பொறுப்பேற்க வேண்டும்.

4. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் அனைத்து நிறுவனங்களும் சர்வதேச சமூகமும் அனைத்து அரச மற்றும் சிவில் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், உலகில் உள்ள அனைத்து சமூகப்பற்று எண்ணம் கொண்ட குடிமக்கள் மற்றும் உலகில் அமைதியை விரும்புவோர், பாலஸ்தீன மக்களுக்கு எதிரான அதன் தாக்குதல்கள், அடக்குமுறைகள் மற்றும் ஆக்கிரமிப்புக்களை நிறுத்துவதற்கு, இஸ்ரேல் மீது திணிக்க தேவையான நடவடிக்கைகளில் விரைந்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

5. இஸ்ரேலை ஆதரிப்பதை நிறுத்திவிட்டு, சர்வதேச சட்டத்தின்படி, நயவஞ்சகத்தனம் மற்றும் இரட்டை நிலைப்பாடு இல்லாமல் நியாயமான ரீதியில் நடந்துகொள்ளுமாறு, மேற்கத்திய நாடுகளுக்கு குறிப்பாக, ஐ.நா. பாதுகாப்பு சபையின் மூன்று நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகியோரிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். மனித விழுமியங்கள், மனித உரிமைகள் ஆகியவற்றைக் கையாள்வதில், நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டிய தருணம் இதுவாகும்." என்று கூறினார்.



இன்ஷா அல்லாஹ்
புனித உம்றா
NOVEMBER - 2023
R.AAKHIR / J.AWWAL - 1445
மாஷா அல்லாஹ்
• இன்ஷா அல்லாஹ் இரண்டு ஹரம்களிலும் ஜும்ஆக்கள்.
• இரண்டு ஹரம்களுக்கும் மிக அண்மையில் தங்குமிடம்.
◦ மக்கா Taj-Al-Raaqi (3 Star Hotel)
◦ மதீனா Amjad-Al-Gharra (3 Star Hotel)
• தாயிப், ஆயிஷா மஸ்ஜித் பயணங்கள் உட்பட மக்கா, மதீனா ஸியாரத் etc.
• சிறப்பான உணவு பானங்கள்.
• உலமாக்களின் பூரண வழிகாட்டலுடன் மேலும் பல சேவைகள்.
வெளிநாடுகளில் தொழில் புரிவோரும் எம்மோடு இணைந்து பயணிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்
SPECIAL PACKAGE 375,000/-
10 DAYS
எமது உம்றா குழு இன்ஷா அல்லாஹ்
புறப்படுதல் 08.11.2023 Mid-Night 09th Early Morning COL - JED
QATAR
திரும்புதல் 18.11.2023 - 4.30 PM MAD - COL
முன்னாள் ஆசிரிய ஆலோசகர், கொழும்பு பெரியபள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்லால் (பாரி) B.A.(Hons) அவர்களின் தலைமையில் இன்ஷா அல்லாஹ் செல்ல இருக்கும் இந்த யாத்திரையில் இணைந்து பதிவு செய்துகொள்ள உடன் அழையுங்கள்:
IFLAL MOULAVI : 077 731 0845(SL) /00 966 54 804 4113(KSA)
SHIFRI HAJ : 077 755 6200
AL HAJ S. SHAHABDEEN (JP) : 077 311 8778
CHAIRMAN / MANAGING DIRECTOR
IATA Accredited Agent Air Line Ticketing, Haj & Umra Operators
SKY WORLD TRAVELS (PVT)LTD
F-21, People's Park Complex, Col-12 Tel: 011 2395365



INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE

Counseling & Psychology
Teacher Training
Business Management
Spoken English
AMI Montessori
Child Psychology
IT Programs
CALL US FOR MORE DETAILS 0765204604 | 0778877907
Awarded By: INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK www.ipauk.org.uk

HND (UK) PROGRAMS
HND (UK) in Business Management
HND (UK) in Computing
HND (UK) in Teacher Training
HND (UK) in Psychology
HND (UK) in English
CALL US FOR MORE DETAILS 0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED

Bachelors in Psychology
Bachelor of Education
BBA / MBA
BA in English
BSC IT
CALL US FOR MORE DETAILS 0765204604 | 0767727032
AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 NOVEMBER 12 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# குழந்தைகளின் மயானமாக மாறிவரும் காஸா

காஸா – இஸ்ரேல் யுத்தம் ஆரம்பமாகி 35 நாட்கள் கழிந்துள்ள நிலையில், காஸாவின் நிலைமை மிக மோசமாக இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளின் மயானமாக மாறிவரும் காஸாவில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுலுக்கு கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியார் குத்ரீஸ் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை உலகுக்கு விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் பிரதான நகரமான நியூயோர்க்கில் இருந்து முழு உலகுக்கும் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுத்த போதும் நியுயோர்க்குக்கு சற்றுத் தொலைவில் அமைந்துள்ள வொஷிங்டனுக்கு இந்த வேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே இருக்கின்றது.

இஸ்ரேலின் முரட்டுத்தனமான செயற்பாடுகளால் திறந்த வெளிச் சிறையாக மாறியுள்ள காஸாவில் இதுவரை 10,500க்கும் மேற்பட்ட மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள். 35,000 க்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் கொன்று குவித்துள்ள பலஸ்தீனர்களில் 7,000க்கு மேற்பட்டவர்கள் எதுவும் அறியாத குழந்தைகள் என ஐ.நாபொதுச் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனப் பணயக் கைதிகளை இப்போது விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த ஐ.நா பொதுச் செயலாளர் நாயகம் காஸாவிலுள்ள பொதுமக்கள், ஐ.நா பாதுகாப்பு அரண்கள், பள்ளிவாசல்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

காஸாவில் அனைத்து மக்களுக்கும் தேவையான உணவு, தண்ணீர், மருந்துகள் மற்றும் மருத்துவ மனைகள் போன்ற என்ன தேவையோ அந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுச்செயலாளரின் இந்த உருக்கமான வேண்டுகோளை உதாசீனம் செய்துள்ள இஸ்ரேல், தொடர்ந்து அழிவுகளை மேற்கொண்டு வருகின்றது.

இஸ்ரேலின் இரட்டைப் போக்கு குறித்து முழு உலகமும் எதிர்ப்பு தெரிவித்து வந்த போதும் நாளுக்கு நாள் காஸாவில் மிக மோசமான செயற்பாடுகள் நடந்த வண்ணமே உள்ளன.

பலஸ்தீனில்10 நிமிடத்திற்கு 1குழந்தை மரணிப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீனில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் 39 பிள்ளைகள் ஒட்சிசன் வழங்கப்படாததினால் மரணமானது என்ற வேதனைச் செய்தியும் கிடைத்துள்ளது.

இதேநேரம் நாளாந்தம் இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் கண்டனங்களும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இஸ்ரேலில் கூட ஆர்ப்பாட்டங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. கடந்த செவ்வாயன்று கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் காஸாவுக்கு ஆதரவாக இன மத பேதமின்றி கொட்டும் மழையிலும் மக்கள் திரண்டு வந்து தனது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். பலஸ்தீனில் மனிதப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும். யுத்தத்தை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை உடன் தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தி அமைதி மாநாடு ஒன்றையே நடத்தினர். வீ. ஆர். வன் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அமைதி மாநாட்டில் பலஸ்தீன மக்களின் உரிமைகளை வழங்கி யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தும் பிரகடனம் ஒன்றும் செய்யப்பட்டது. யுத்தத்தை உலக மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்கு ஐ.நா பொதுச் சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் சிறந்த சான்றாகும்.

இதேநேரம் அண்மையில் வெளிமடை நீதிமன்றத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒரே விதமான கரிசனைகள் பதிவாகி இருக்கும் இலங்கை மற்றும் காஸா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் இரு வேறு விதமாகக் கையாள்வது ஏன் என கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்கள் காசாவிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து நாடுகளும் மனித உரிமைகள் தொடர்பாக உலகளாவிய பிரகடனம் எனும் மிக முக்கிய ஆவணத்திற்கு அமைவாகச் செயற்படுவது அவசியமாகும் எனக் கூறியுள்ள ஜனாதிபதி ரணில், கடந்த ஒக்டோபர் 07ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்திய போது அதனை இலங்கை கண்டித்துள்ளதும் தற்போது ஐ.நா முகவர் அமைப்புகள் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின் படி 10,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதனை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) “உதயம்”
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

# விளையாட்டின் விதியில் விளையாடும் ராஜதந்திரம்!



சுஐப்,எம்,காசிம்

விளையாட்டால் அரசியல் அதிர்கிறதா அல்லது விளையாட்டாக இலங்கை அரசியல் அதிர்கிறதா? இதுதான், இலங்கையின் நடப்பு விவகாரம். ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பேதமில்லாமல் பாராளுமன்றத்தில் எல்லோரும் இணங்கியதால் வந்துள்ள சந்தேகமிது. நாட்டில் இவ்வாறான ஒன்றுபடல்கள் எட்டாக்கனிதான். இப்போது, எட்டும் தூரத்தில் கனிகள் பழுத்துள்ளதே எதற்காக? ஆட்சியதிகாரத்தை தீர்மானிப்பது வாக்காளர்களா அல்லது பணக்காரர்களா? என்ற குழப்பம்போல் குளறுபடியாக உள்ள விவகாரங்கள் இவை. ஸ்ரீலங்கா கிரிக்கெட் இவ்வளவு ஆழத்துக்கு வேரூன்றியுள்ளதை நினைக்கையில் வியர்க்கிறது.

விளையாட்டு வீரர்கள் பெயரில் ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு ஹீரோ இருக்குமளவுக்கு நமது நாட்டில் விளையாட்டுக்கு மவுசு. இதிலும் ஒருபடி மேலுள்ளது கிரிக்கெட்டின் பிடிப்பு. உலகக் கிண்ணம், ரீ- 20, ஒருநாள் போட்டி மற்றும் ஐ.பீ. எல். போட்டிக் காலங்களில் வீடுகள் களைகட்டுவதும், வீதிகள் தோறும் திரைகளில் போட்டிகளை கண்டுகளிக்க மக்கள் திரள்வதிலிருந்தும் இது புரிகிறது. இந்த ரசனைக்கு நாடு, வீடு, நகர, கிராம வேறுபாடுகளிருக்காது. ஏன், வயது மற்றும் ஆண், பெண் என்ற பால் வேறுபாடுகளும் கிரிக்கெட்டின் ரசனைகளில் இல்லை. அரசியல்வாதிகள் இதை நன்குணர்ந்துள்ளனர். இதனால்தான், இலங்கை கிரிக்கெட்டில் நிலவும் ஊழல்களை வெளிக்கொணர ஒன்றுபட்டுள்ளனர்.

2018 முதல் 2023 வரையான காலப்பகுதியிலான இலங்கை கிரிக்கெட் சபையின் கணக்கறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு, விளையாட்டுத் துறை அமைச்சர் கோரியதால் வந்த விவகாரம் இன்று விஸ்வரூபமாகிவிட்டது. பாராளுமன்றம் கோரினாலன்றி ஐந்து வருடகால கணக்கறிக்கையை தர முடியாதென மறுத்த இலங்கை கிரிக்கெட் சபை, ஓரிரு வருடங்களின் அறிக்கைகளைத் தருவதாகவே ஏற்றுக்கொண்டது. இதை பகிரங்கமாகவே பாராளுமன்றத்தில் (08) விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

கிரிக்கெட் சபை எந்த அதிகாரத்தின் கீழ் இயங்குகிறதென்ற இழுபறிகள் இதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. எதைச் செய்தாலும் சர்வதேச கிரிக்கெட் சபையின் செல்வாக்கே மிகைக்குமென்ற கதையும் இல்லாமலில்லை. உலகக் கிண்ணத்தை 1996இல் அர்ஜுன ரணதுங்க தலைமையிலும் ரீ-20 கிண்ணத்தை லசித் மலிங்க தலைமையில் 2012இலும் ஈட்டிய இலங்கையின் பெருமைகளுக்கு நடந்தவை என்ன?

ஊழல்வாதிகள், லஞ்சவாதிகள் மற்றும் போதைவாதிகளின் பிடியில் சிக்குமளவுக்கு தரம் குறைந்ததால், சமீபகால போட்டிகளிலும் வெற்றியின்றி வெட்கிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதுவே, கிரிக்கெட் ரசிகர்களின் ஆதங்கம். இது ஆத்திரமாக மாறாமலிருக்க, காத்திரமான பணிகள் செய்வது அரசியல் தலைமைகளின் பொறுப்பாகியுள்ளது. ரசிகர்களின் வாக்குகளுக்கு தீர்மானிக்கும் திராணியுள்ளதால், அரசியல் கட்சிகள் கவனமாக இதைக் கையாளலாம். அன்னம், தண்ணி உண்ணாமலே கிரிக்கெட் போட்டிகளை கண்டுகளிக்கும் நம் நாட்டு ரசிகர்களுக்கெல்லாம் பொருளாதார நெருக்கடிகள் எல்லாம் ஒரு பொருட்டுமில்லை.

சர்வதேச கிரிக்கெட் போட்டியின் வரலாற்றில் ”டைம் அவுட்” முறையில் நமது வீரர் அஞ்சலோ மெத்தியுஸ் பங்களாதேஷ் அணியினரால் ஆட்டமிழக்கச் செய்ததை நோக்குகையில், விதி வேறு கருணை வேறு என்பதை உணர்த்துகிறது. இதற்காக, பங்களாதேஷ் அணியினரை கடிந்துகொள்வதா அல்லது ஆடுகளத்தில் நுழைந்து இரண்டு நிமிடங்களுக்குள் துடுப்பாட்ட வீரர் தயாராக வேண்டுமென்ற விதியை இயற்றியவர்களை நொந்துகொள்வதா? வெற்றிக்காக சட்டத்திலுள்ள சகலதையும் பயன்படுத்தத் தூண்டுவதுதான் விளையாட்டு. ஆனால், இப்படிப் பெறும் அல்லது பெற்றுக்கொண்ட வெற்றிப் பெருமைகளுக்கு இலங்கையில் நடப்பது என்ன? 13ஆவது தடவையாக நடைபெறும் இவ்வுலகக்கிண்ணப் போட்டியில், மேற்கிந்தியதீவு கலந்துகொள்ளாத போட்டியிது. இரண்டு தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற அணிக்கு இந்நிலை ஏன் வந்தது.? இலங்கையும் எதிர்காலத்தில் இந்நிலைக்குச் செல்லுமா?

முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் முயற்சியில், 1982இல் நமது நாட்டுக்கு டெஸ்ட் போட்டி அந்தஸ்து கிடைத்ததிலிருந்து 1996 வரைக்கும் கிரிக்கெட் உலகின் பார்வை நமது நாட்டுப்பக்கம் தலைகாட்டவே இல்லை. 14 வருடங்களின் பின்னர் தலைநிமிர்ந்த ஸ்ரீலங்கா கிரிக்கெட் மீண்டும் 15 வருடங்களின் பிறகு ஒளியிழந்து வருகிறது. இத்தனைக்கும் உலகக் கிண்ணங்களை ஈட்டுமளவுக்கு இலங்கையில் தரமுயர்ந்த விளையாட்டும் கிரிக்கெட்தான்.




1952இல் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற னுச.எதிர்வீரசிங்கம், முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் போன்றவர்களின் திறமைகளால் பேதங்களைக் கடந்து, நாட்டுப்பற்றில் ஒன்றிக்கும் உணர்வுகளை விளையாட்டுக்களே ஏற்படுத்துகின்றன. இதில், கிரிக்கெட் தனியிடத்தில். இப்படியுள்ள இந்தக் கிரிக்கெட், பாராளுமன்றம் எடுத்துள்ள முடிவால் சர்வதேச தரத்திலிருந்து ஒதுக்கப்பட்டால், பொறுப்புக் கூறுவது யார்? அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் கேள்வி, ஜனாதிபதி ரணிலின் நிலைப்பாட்டை சரிகாணவே செய்கிறது.



# காசா போர் வெற்றி யாருக்கு?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

2023 அக்டோபர் 7 ந் தேதி, காசாவில் இருந்து ஹமாஸ் இஸ்ரேல் நாட்டின் உள்ளே ஊடுருவல் செய்து பல ஆயிரக்கணக்கான மக்களை கடத்தி, பல்வேறு இராணுவ முகாம்களை தகர்த்து, பல இராணுவ வீரர்களை கொலை செய்து இன்னும் நூற்றுக் கணக்கான பேரை பணய கைதிகளாக கைது செய்து தமது இலக்கை நோக்கி திரும்பி வந்த சம்பவம் மற்றும் அதனைச் தொடர்ந்து இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டு வரும் போர் தான் இதன் கருப்பொருளாக அமைந்து விட்டது.

இந்த நிலையில் வெற்றி ஒன்றே நமது இலக்கு என்கிற குறிக்கோளை அடைய வெறித்தனமான போர் வேட்டையை மேற்கொண்டு வரும் இஸ்ரேல் இராணுவம் ஒரு மாதம் கழிந்த பிறகும் ஏன் வெற்றி பெற முடியவில்லை என்கிற கேள்வி எல்லாருடைய மனதிலும் எழுவது நியாயமான ஒன்றுதான்.

இஸ்ரேல் இராணுவம் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை. அரேபியா பிராந்தியத்தில் தமக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்கிற பொல்லாத சதி திட்டத்தின் அடிப்படையில் தான் மேற்குலகம் இஸ்ரேலிய நாட்டின் மீது அதிகம் அக்கறையை காட்டியது . அமெரிக்கா தமது உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப அறிவுகளை இஸ்ரேல் இராணுவத்திற்கு வழங்கி ஆசிய பிராந்திய தாதாவாக உருமாற்றம் அடைய செய்தது . இந்த உருமாற்றம் மற்றும் செயல்பாட்டிற்காக பல நூற்றுக்கணக்கான பில்லியன் அமெரிக்க டாலர்களை பெற்றுக் கொண்ட யூதர்கள் எந்தவொரு எல்லைக்கும் தாங்களால் செல்ல முடியும் என்றும், இந்த உலகில் தங்களை கட்டுப்படுத்த எந்தவொரு சக்தியும் இனி ஒரு போதும் இல்லை என்கிற அதிகார மமதை தான் இது போன்ற ஆயுத போருக்கு காரணமாக அமைந்து விட்டது.







இஸ்ரேல் இராணுவம் ஆசிய மற்றும் மத்திய தரைக்கடல் பகுதியில் மிகப்பெரிய பெரிய வல்லாதிக்க சக்தியாகவும், அறிவுசார் தொழில்நுட்ப கருவிகளை தன்னிடம் இருப்பதாகவும் ஒரு மாய பிம்பத்தை ( ஐடடரளழைளெ ) இஸ்ரேலிய அரசும் அதன் இராணுவ தலைமையும் ஏற்படுத்தி இருந்தது.இந்த மாய பிம்பத்தை ஹமாஸ் இயக்கம் முற்றிலுமாக உடைத்தெறிந்து மிகப்பெரிய அளவில் உயிர் சேதத்தையும் ஏற்படுத்தியது. இதனை தாங்க முடியாத பெஞ்சமின் நெதன்யாகு தனது சுய கௌரவம் மற்றும் வல்லாதிக்க சக்தி முற்றிலுமாக துடைத்து எறியப்பட்டுள்ளதாக உணர்ந்து வெறிபிடித்த நிலைக்கு உள்ளானார். இந்த நிலையில் அதன் வர்த்தக கூட்டாளியான அமெரிக்கா தனது செல்லப்பிள்ளையான இஸ்ரேல் இந்த போரை நடத்தும் போது ஏற்படும் பின்விளைவுகள் குறித்து தெளிவான அறிவுறுத்தல்களை வழக்கத்திற்கு அதிகமாகவே அள்ளி வழங்கியது. அதற்கு மிக முக்கியமான காரணம் அமெரிக்காவின் கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவம் என்றால் மிகையாகாது. அமெரிக்கா இது போன்ற ஒரு அனுபவத்தை தான் வியட்நாம், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தானில் பெற்றது. குறிப்பாக ஈராக் நாட்டில் மோசூல் மற்றும் பலூஜாவில் நடைபெற்ற தரைப்போரில் ஆயிரக்கணக்கான அமெரிக்க போர் வீரர்களை பலி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவிற்கு உருவாகியது.இந்த மோசமான அனுபவத்தை தான் அமெரிக்கா தனது சக நண்பரான இஸ்ரேல் இடம் புத்திமதியாக எடுத்து கூறியது.

இருந்த போதிலும் தற்போதைய நிலையில் அமெரிக்கா தனது சக்கரவர்த்தி தனத்தை அந்த பிராந்தியத்தில் நிலை நிறுத்த இரண்டு நாசகார ஆயுதங்களை கொண்ட போர்கப்பல்களை நிறுத்தி சவால் விட்டது. (யு எஸ் எஸ் காணி மற்றும் ஜெரால்ட் ஆர் போர்ட் )

இந்நிலையில் எல்லாவற்றையும் மீறிய நிலையில், இஸ்ரேலிய இராணுவம் காசாவிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தும் தனது வலிமையான திட்டத்தை அமுல்படுத்தியது . ஒரு விதத்தில் இது அமெரிக்காவிற்கு எரிச்சலை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. ஆகவே தான் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆண்டனி பிளிங்டன், இராணுவ துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஆகியோரை உடனடியாக இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தது .

அதே நேரம், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆண்டனி பிளிங்டன் மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள பல்வேறு அரபு தேசங்களின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி கள நிலவரத்தை முழுமையாக அறிந்து கொண்டார் என்பதே உண்மையாகும். இதனை அமெரிக்கா மத்திய தலைமைக்கு தெளிவாக அனுப்பி வைத்தார். அரபு தலைவர்கள் முழுமையாக பாலஸ்தீன பிரதேசத்தில் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று குரல் எழுப்பி வந்தனர். இஸ்ரேல் தேசத்தின் அரச தலைமை தன்னிடம் இருக்கும் நாசகார ஆயுதங்களை மட்டுமே நம்பியது. இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து மிகவும் கடுமையான முறையில் குண்டுகளை ஒரு சிறிய நிலப்பரப்பை குறி வைத்து வீசி அழித்தது தான் சர்வதேச அளவில் மிகப் பெரிய அளவில் பதட்டத்தை உருவாக்கியது . இந்த அழுத்தம் அமெரிக்காவிற்கு பல்வேறு வழிகளில் ஏற்பட்ட போது அவர்கள் மீண்டும், மீண்டும் இஸ்ரேல் அரச தலைமையிடம் போர் நிறுத்தம் வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர் . ஆனாலும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எந்த விதத்திலும் செவி சாய்க்காமல் மக்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்த நடவடிக்கை முற்றிலுமாக அவரது வருங்கால அரசியல் வளர்ச்சியை மையப்படுத்தியே அமைந்துள்ளது என்று மேற்கத்திய ஊடகங்கள் கருத்து தெரிவிக்க தவறவில்லை.

தற்போதைய நிலையில் இஸ்ரேல் இராணுவம் மிகப்பெரிய அளவில் பின்னடைவை சந்தித்து வருவதாக மேற்கத்திய நாடுகளின் ஊடகங்கள் மட்டுமல்லாமல் அல் அரேபியா தொலைக்காட்சி மற்றும் அல் ஜசீராவின் செய்திகள் வெளியாகியுள்ளன.இத்தனை வலிமையான மெக்கோவா மற்றும் நாமல் டேங்கர்களை கொண்ட இஸ்ரேலிய இராணுவத்திற்கு எந்த அடிப்படையில் பின்னடைவு ஏற்பட்டது என்கிற கேள்வி எல்லோருடைய மனதிலும் இயல்பாக ஏற்படும் ஒன்றுதான் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

அமெரிக்கா 320 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை இது வரை இஸ்ரேலிய இராணுவத்திற்கு சப்ளை செய்துள்ளது. அதேநேரத்தில் 14.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை அவசர கால போர் நிதியாக இஸ்ரேலிய இராணுவத்திற்கு கொடுத்து உதவ அமெரிக்க செனட் மற்றும் காங்கிரஸ் ஆகிய இரண்டு சபைகளிலும் ஒப்புதலை பெற்றுள்ளது. அதேநேரத்தில் கு16 குண்டு வீச்சு விமானங்கள், ராக்கெட் லோஞ்சர்கள், நீண்ட தூர ஏவுகணைகள், நள்ளிரவில் குறி பார்த்து இலக்கை சுடக்கூடிய துப்பாக்கிகள், ஜி பி எஸ் கருவிகள், குண்டு வீசும் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள், வானில் எரிபொருள் நிரப்பும் டேங்கர் விமானங்கள், இராணுவ தளவாடங்கள் மற்றும் இராணுவ வீரர்களை ஒரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர வைக்கும் பரிமாற்ற விமானங்கள், ஆப்கானிஸ்தானில் தோரா -- போரா மலைகளை துளைக்க பயன்படுத்திய வெடிகுண்டுகள் மற்றும் பங்கர் பஸ்டர் வகை குண்டுகள் என்று இன்னும் நாம் வகைப்படுத்த முடியாத ஆயுதங்களை கொண்ட இஸ்ரேலிய இராணுவம் எப்படி தோல்வியை சந்திக்கும் என்பதே பலரது கேள்வியாகும்.

பொதுவாக மனிதர்களுக்கு ஏற்படுகிற மிகப் பெரிய சந்தேகம் என்னெவென்றால் இத்தனை வல்லாதிக்க சக்தி மற்றும் ஆயுத பலத்தை முழுமையாக கொண்ட இஸ்ரேல்... அமெரிக்கா கூட்டு சக்திகளை ஹமாஸ் என்னும் ஒரு சிறிய குழு எப்படி வெற்றி பெறும் என்கிற கேள்வி எழுவது சாத்தியம் என்பது இயல்பான ஒன்றுதான் . அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிய இராணுவத்திற்கு அடிப்படையாக சில மாறுபட்ட குணாதிசயங்கள் உள்ளன என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், ஹமாஸ் இயக்கம் சித்தாந்த ரீதியாக இயங்கும் ஒரு அமைப்பாகும். இஸ்ரேலிய இராணுவம் முழுமையாக ஆயுத பலத்தை மட்டுமே நம்பி தான் இயங்குகிறது. இஸ்ரேலிய விமானப் படை ஆயுத பலத்தை கொண்டு மிகப்பெரிய அளவில் தாக்குதலை காசாவின் மருத்துவமனை மற்றும் அகதிகள் முகாம்களில் நடத்தி பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் மற்றும் பெண்களை கொலை செய்து விட்டனர். இந்த படுபாதக செயலை இஸ்ரேல் இராணுவம் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது . இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சர்வதேச நாடுகளில் நடைபெற்று வருகின்ற மிக கடுமையான போராட்டத்தை கூட கணக்கில் எடுத்துக் கொள்ள மறுத்து, போர் நிறுத்தம் இல்லை என்று உறுதியாக அறிவிப்பு செய்து வருகிறார். இது மிகப் பெரிய ( புநழெஉனைந) இன சுத்திகரிப்பு நடவடிக்கை என்று சர்வதேச அமைப்புக்கள் தொடர்ந்து கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

இது போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் நெதன்யாகுவின் தீவிர கடும் போக்குவாதம் தரை போரில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக முடிவுக்கு வரும் என்று முன்னாள் இஸ்ரேலிய இராணுவ தளபதிகள் கருத்தாக இருக்கிறது. இதற்கு மூல காரணம் இஸ்ரேல் இராணுவம் காசாவில் நுழைந்தபின் இதுவரை 136 டேங்கர்கள் வரை அழிக்கப்பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் பலியாகி இருக்க கூடும் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த தரைப்போரில் இஸ்ரேல் இராணுவம் காசாவில் நெருக்கடியை சந்தித்து வர பல்வேறு காரணங்கள் உள்ளதாக சர்வதேச போர் துறை சார்ந்த ஆளுமைகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவம் காசாவின் உட்பகுதியில் புகுந்து வடக்கு பகுதி முழுவதையும் ஆக்கிரமிப்பு செய்து விட்டது உண்மை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை . ஆனாலும், ஹமாஸ் படையினர் இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து தான் காத்திருந்தனர். இந்த சூழ்நிலையில் தான் ஹமாஸ் படையினர் சுரங்கப்பாதைகளில் இருந்து வெளியே வந்து டேங்கர்களை ராக்கெட் லோஞ்சர்கள் மூலம் தாக்குதல் நடத்தி விட்டு சுரங்கப்பாதைகளில் மறைந்து விடுகிறார்கள். அதே வேளையில் அல் அரேபியா தொலைக்காட்சி வெளியிட்ட காணொளியில் இஸ்ரேல் இராணுவம் காசாவில் குண்டுகளை வீசி சுக்கு நூறாக்கிய கட்டடங்களின் இடிபாடுகளில் ஹமாஸ் இயக்கத்தினர் மறைந்து ராக்கெட் லோஞ்சர்கள் மூலம் இஸ்ரேலிய டேங்கர்கள் தாக்கி முழுமையாக அழித்து விடுவதை நாம் காண முடிகிறது. தற்போதைய நிலையில் இஸ்ரேலிய இராணுவம் காசாவின் உட்பகுதியில் இது போன்ற பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருவதாக மிகுந்த ஆதாரபூர்வமான செய்திகளினுடே நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் இஸ்ரேலிய வீரர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி இருக்க அதிக வாய்ப்பு உள்ளதை நாம் மறுக்க முடியாது.

இந்த உச்ச கட்ட பின்னடைவை தாங்க முடியாத இஸ்ரேல் இராணுவம் தினமும் அப்பாவி பொதுமக்களை காசாவில் குண்டு வீசி படுகொலை செய்து வருகின்றனர். இந்த செய்திகள் தற்போது சர்வதேச ஊடகங்கள் வாயிலாக வெளி வந்து கொண்டு இருக்கிறது.



அதேவேளையில், அமெரிக்கா இராணுவ நிலைகளின் மீது ஏமன் நாட்டின் ஹொளதிகள் மற்றும் லெபனானில் இருந்து ஹிஸ்புல்லாக்கள் நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வருவது மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா அரசு தலைமை இது போன்ற இறுக்கமான சூழ்நிலையில் இஸ்ரேல் இராணுவம் இந்த போரை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்பது வெளிப்படையாக தெரியவருகிறது. இதற்கு காரணம் அடுத்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெறப்போகும் தேர்தல் மற்றும் சர்வதேச நாடுகள் மற்றும் பொதுமக்கள் புறத்தில் இருந்து வருகின்ற மிகப் பெரிய அழுத்தம் என்பது தான் உண்மையாகும்.

தற்போதைய நிலையில் தரைப்போரில் காலை வைத்து விட்ட இஸ்ரேலிய இராணுவம் வெளியே எப்படி வருவது என்கிற சிக்கலும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்கா தனிப்பட்ட முறையில் அரபு நாடுகளின் தலைவர்களிடையே சமாதானம் பேசி போரை முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்து கொண்டு இருக்கிறது. ஏனெனில், இஸ்ரேல்... பாலஸ்தீன போரின் மூலம் ரஷ்யா... உக்ரைன் போர் பல்வேறு வடிவங்களில் திசை மாறி வருவதை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகி வருகிறது. ஆகவேதான் அமெரிக்கா இஸ்ரேல்.... பாலஸ்தீன போரை மிக விரைவாக முடிவுக்கு கொண்டு வர மிக கடுமையாக முயற்சி செய்து வருவதை நாம் இங்கே சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

காசாவின் தரைப்போரில் இஸ்ரேல் இராணுவம் பல நூற்றுக் கணக்கான டேங்கர்களை இழந்து பல நூற்றுக்கணக்கான யூத இராணுவ வீரர்களை தொடர்ந்து இழந்து வருகிறது. இந்த போரில் ஹமாஸ், ஹிஸ்புல்லாக்கள், ஏமன் ஹொளதிகள் மற்றும் இஸ்லாமிய ஜிஹாதிய படைகள் ஆகிய பலமுனை தாக்குதலை எதிர்கொள்ள சக்தி அற்ற நிலை தான் இஸ்ரேலிய இராணுவத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஹிஸ்புல்லாக்கள் இடம் ளுயு-22 ளலளவநஅ மற்றும் "யவெளசை-ளு1 போன்ற சக்தி வாய்ந்த ஏவுகணைகள் உள்ளதால் இஸ்ரேல் பதட்டம் அடைந்துள்ளது . அதே நேரத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய கடற்படை கப்பல்களை தாக்கும் வல்லமை கொண்ட பல்வேறு தொழில் நுட்ப ஏவுகணைகள் தன்னகத்தே கொண்டுள்ள வலிமையான இராணுவ அமைப்பாக ஹிஸ்புல்லாக்கள் மாறி உள்ளனர். ஹிஸ்புல்லாக்கள் நீண்ட மற்றும் குறுகிய தூர ஏவும் வகையில் 1,50000 க்கு மேற்பட்ட ஏவுகணைகளை வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது வரை லெபனான் மற்றும் காசாவில் இருந்து தினமும் வீசப்படும் ஏவுகணை தாக்குதல் காரணமாக இஸ்ரேலிய நகரில் பலர் இறந்து வருகின்றனர்.

10ம் பக்கம் பார்க்க >>>

# திருகோணமலையில் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து கிடைக்காமை மிகவும் கவலையளிக்கிறது

## இம்ரான் எம்.பி



(மூதூர் எஸ்.ஏ.பறூஸ்)

தமிழ்மொழி பேசுவோர் சுமார் 75 வீதம் வாழ்கின்ற திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படாமை குறித்து மிகவும் கவலையடைகின்றேன் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, கபில நுவான் அத்துக்கோரள ஆகியோரின் இணைத்தலைமையின் கீழ் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம், தமிழ் மக்கள் சுமார் 75 வீதத்திற்கும் மேல் வாழ்கின்றனர். அதேபோல ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும் அதிகமான அதிகாரிகளும் தமிழ் மொழி பேசுவோராக உள்ளனர்.

இந்நிலையில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் அதிகமான விடயங்கள் சிங்கள மொழியிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. சிங்கள - தமிழ் உரைபெயர்ப்பாளர்கள் எவரும் நியமிக்கப் பட்டிருக்கவுமில்லை. இதனால் பல அதிகாரிகள் தமது கருத்துக்களை சரியாக முன்வைப்பதில் இடர்பாடுகளை அனுபவிப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. உரைபெயர்ப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு சமகாலத்தில் உரைபெயர்ப்புச் செய்யும் வசதிகள் செய்யப்பட்டன. இதனால் யாரும் தமது கருத்துக்களை தெளிவாகச் சொல்லக் கூடியதாகவும், கேட்கக் கூடியதாகவும் இருந்தது.

தற்போது அந்த நிலை மாற்றமடைந்து காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டம் தமிழ் மொழிபேசுவோர் அதிகமுள்ள மாவட்டம் . இந்த மாவட்டத்திலேயே தமிழ்மொழி புறக்கணிப்படுவது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன் என்றார்.

இதற்குப் பதிலளித்த அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, இந்தக் குறைபாட்டை நானும் உணர்கின்றேன். தவறு இடம்பெற்றுள்ளமை தெரிகின்றது. அடுத்து வரும் கூட்டங்களில் இது போன்ற குறைபாடுகள் வராது கவனித்துக் கொள்வேன் எனத் தெரிவித்தார்.

# அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான இறுதிச் சான்றிதழ் பரீட்சை

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கை பரீட்சைத் திகைக்களத்தினால் நடாத்தப்படும் 2023 ஆம் ஆண்டிற்கான அஹதிய்யா பாடசாலைகளுக்கான இறுதிச் சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சை தொடர்பான பிரமானக் குறிப்புகள் மற்றும் அறிவுறுத்தல்கள் 2023.11.17 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்படும். அத்துடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இணையத்தளம் (www.muslimaffairs.gov.lk) ஊடாகவும் அறிவித்தல்கள் வழங்கப்படவுள்ளது. இணைய வழி மூலமாக மாத்திரம் கோரப்படவுள்ள விண்ணப்பங்களை எதிர் வரும் 2023.11.17 ஆம் திகதி முற்பகல் 9.00 மணி முதல் 2023.11.27 ஆம் திகதி பிற்பகல் 9.00 மணி வரை மட்டுமே விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு பணிப்பாளர் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இல 180 ரி.பி.ஜாயா மாவத்த கொழும்பு-10 என்ற முகவரியினூடாகவோ அல்லது 011-2667909 அல்லது 011-2669994 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ பெற்றுக் கொள்ளலாம் என திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸல் தெரிவிக்கின்றார்.

# கல்லொழுவை அல் அமான் ஆசிரியர்களான சஸ்ரின், பாயிஸ் ஆகியோருக்கு அதிபர் தரம் 3 இல் பதவி உயர்வு



(ஐ.ஏ. காதிர் கான்)

மினுவாங்கொடை - கல்லொழுவை, அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்த எம்.எஸ்.எம். சஸ்ரின் மற்றும் எம்.யூ. பாயிஸ் ஆகியோர், அதிபர் தரம் - 3 ற்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், கல்வி அமைச்சினால் அண்மையில் (04.11.2023) வழங்கி வைக்கப்பட்டன.

ஆசிரியர் சஸ்ரின், அல் அமான் வித்தியாலயத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உதவி அதிபராக 11 வருடங்களாக (நியமனம் கிடைக்கும் வரை) தொடர்ந்தும் இவ்வித்தியாலயத்தில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் எம். யூ. பாயிஸ், குறித்த பாடசாலையில் 2009 ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் பாட ஆசிரியராக 14 வருடங்களாகக் கடமையாற்றிவிட்டு, 2023 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் நீர்கொழும்பு - அல் பலாஹ் கல்லூரிக்கு இடம்மாற்றம் பெற்று, (நியமனம் கிடைக்கும் வரை) அங்கு தற்பொழுது இஸ்லாம் பாட ஆசிரியராக சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களான எம்.எஸ்.எம். சஸ்ரின் மற்றும் எம்.யூ. பாயிஸ் ஆகிய இருவருக்கும், அல் - அமான் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன, வித்தியாலய அதிபர் எம். ரீ.எம். ஆஸிம் உள்ளிட்ட ஆசிரியர் குழாம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

# அல் - அமான் மூன்று மாடிக் கட்டட திறப்பு விழா குறித்த கலந்துரையாடல்




(ஐ.ஏ. காதிர் கான்)

அல் ஹாஜ் லியாவுல் பௌஸ ினால், அவரது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக, மினுவாங்கொடை - கல்லொழுவை பிரதேசத்தில் அமைந்துள்ள அல் - அமான் முஸ்லிம் மகா வித்தியாலய வளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழாவினை, எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவை நடத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று, (05) ஞாயிற்றுக்கிழமை இரவு, வித்தியாலய அதிபர் எம். ஆஸிம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விசேட கலந்துரையாடல் நிகழ்வில்,

பிரதேசத்திலுள்ள முஸ்லிம் அமைப்புகள், சங்கங்கள், புத்திஜீவிகள், நலன் விரும்பிகள் என, பல்வேறு துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்வின் இறுதியில், பழைய மாணவரும் கல்லொழுவை ஜும்ஆப் பள்ளிவாசலின் ஆயுட்காலத் தலைவருமான அல் ஹாஜ் ஏ.எச். எம். முனாஸ் தலைமையில், அல் - அமான் பழைய மாணவர் சங்கத்தின் முகாமைத்துவக் குழுவினரால், "அல்ஹாஜ் லியாவுல் பௌஸ்" கேட்போர் கூடத்திற்குத் தேவையான பெறுமதி மிக்க ஒரு தொகை மின் குமிழ்கள், பாடசாலை அதிபரிடம் மண்டபத்தில் கையளிக்கப்பட்டது.

# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் பலஸ்தீனில் அமைதி நிலவ துஆப் பிரார்த்தனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை மற்றும் உலமா சபை சாய்ந்தமருது - மாளிகைக்காடு கிளையின் ஏற்பாட்டில், பலஸ்தீன் தொடர்பான குத்பாப் பிரசங்கமும் பலஸ்தீனில் சுபீட்சம் மற்றும் அமைதி நிலவ துஆப் பிரார்த்தனையும் வெள்ளிக்கிழமை (03) சாய்ந்தமருது - மாளிகைக்காடு

ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி குத்பாப் பிரசங்கத்தையும் துஆப் பிரார்த்தனையும் அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அல்ஆலிம் என்.ரீ.எம். சர்ஜூன் (ரஹ்மானி) நிகழ்த்தினார்.

இந்த குத்பாப் பிரசங்கத்திலும் ஜும்ஆத் தொழுகையிலும் சுமார் 2000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியிலிருந்து காங்கேசன் துறைக்கு மீண்டும் பயணிகள் சொகுசு கப்பல்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

தூத்துக்குடியில் இருந்து இலங்கையின் காங்கேசன் துறைமுகத்திற்கு இடையே மீண்டும் பயணிகள் சொகுசு கப்பல் போக்குவரத்து, வருகிற ஜனவரி மாதம் முதல் தொடங்க உள்ளது. விமானத்தில் பயணிக்க தேவைப்படுவது போல விசா, பாஸ்போர்ட் கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி t.c.சிதம்பரனார் துறைமுகத்தை மையமாகக் கொண்டு, தூத்துக்குடி - இலங்கை காங்கேசன்துறை, தூத்துக்குடி - கொழும்பு, ராமேஸ்வரம் - தூ த்துக்குடி - கன்னியாகுமரி இடையே பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்பட உள்ளது.

இதற்காக துபாயில் உள்ள தனியார் நிறுவனத்துடன் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், மும்பையில் நடந்த சர்வதேச கடல்சார் உச்சி மாநாட்டில், மத்திய துறைமுகங்கள் கப்பல் நீர்வழிப் போக்குவரத்து மற்றும் ஆயுஷ் துறை அமைச்சர் சார்பானந்த சோனாவால் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

முதல் கட்டமாக, தூத்துக்குடி - இலங்கை காங்கேசன் துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஜனவரியில் தொடங்கப்படுகிறது. இதற்கான கப்பல் விரைவில் தூத்துக்குடிக்கு வரவுள்ளது. தொடர்ந்து தூத்துக்குடி- கொழும்பு, ராமேஸ்வரம்- தூத்துக்குடி- கன்னியாகுமரி இடையே கப்பல் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கப்பலானது, தினசரி 120 கடல் மைல் தொலைவை மூன்று முதல் நான்கு மணி நேரத்தில் கடக்கும். அதில், எக்கனாமிக் கிளாஸ் 350 பயணிகள் (ஒரு டிக்கெட் ரூ.6000), பிசினஸ் கிளாஸ் 50 பயணிகள் (ஒரு டிக்கெட் ரூ.12,000) என 400 பயணிகள் மற்றும் 40 கார்கள் 28 பஸ் மற்றும் டிரக்குகள் கொண்டு செல்ல முடியும்.சுற்றுலாவிற்குச் சொந்தமான கார்கள் மற்றும் பேருந்துகளில் செல்பவர்கள், தங்கள் கார்கள் மற்றும் பேருந்துகளையும் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு கொண்டு சென்று, மீண்டும் திரும்பி வர முடியும். சொகுசு கப்பலில் வரி இல்லாத விற்பனைக் கடைகள் (டியூட்டி ஃப்ரீ ஷாப்), ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் இருந்து காலையில் புறப்பட்டு, பகல் வேளையில் இலங்கையைச் சென்றடையும். பிறகு பிற்பகலில் இலங்கையின் காங்கேசன் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு, தூத்துக்குடிக்கு இரவு வந்த அடையும். இந்த கப்பலில் பயணிகள் விமானத்தில் பயணிக்கத் தேவைப்படுவது போல விசா, பாஸ்போர்ட் கட்டாயம் வேண்டும். அதேபோல் 80 கிலோ எடையை மட்டுமே பயணிகள் தங்களுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

# நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் எதிர்ப்பு




(செ.திவாகரன்)

நுவரெலியாவிற்கு அடையாள சின்னமாக கடந்த 130 வருடங்களுக்கு மேலாக திகழும் நுவரெலியா தபால் நிலையத்தினை விற்பதற்கு எதிராக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சிலர் செவ்வாய்க்கிழமை (07) தபால் நிலையத்திற்கு முன்பாக கைகளில் பதாகைகளை தாங்கியவாறும் தமது எதிர்ப்பினை வெளிக்காட்டினர்.

அத்துடன் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தொடர்ந்து நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு எதிராக செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

மேலும் பழமையான கட்டிடத்தினை தன்வசமாக்குவதற்கு அரசாங்கத்தின் முயற்சிகள் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியா பிரதான தபால் நிலையத்னை சுற்றி கருப்பு கொடி கட்டியும் , தற்போதைய அரசு எதிரான வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கட்டிடத்தில் காட்சிப்படுத்தப்பட்டு தொடர்ந்து எதிர்ப்பினை வெளிக்காட்டி வருகின்றனர் .

# அழிக்கப்படும் அடையாளம் தப்தர் ஜெய்லானி கள ஆய்வு



சபீர் மொஹமட்

பலருக்கும் இன்று பலாங்கொடை ஜெய்லானியில் ஒரு பள்ளிவாசல் இருந்தது என்ற ஞாபகமே இல்லை. பல வருடங்களுக்கு முன்னர் மிகவும் கோலாகலமாக கொடியேற்றி கந்தூரி வைபவங்கள் நடைபெற்ற வரலாறுகள் முதல் ஜெய்லானியை தரிசிக்க வந்த வெளிநாட்டவர்கள் பலருடைய வரலாறுகளும் அங்கே பதியப்பட்டிருந்தன. இவை அனைத்தும் எமது நாட்டு முஸ்லிம்களின் தொன்மையான வரலாற்றையும் இருப்பையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளாகும். ஆனால் துரதிஷ்டவசமாக இன்று இந்த நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

### தப்தர் ஜெய்லானி பள்ளிவாசலின் தோற்றம்

1960 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை பலாங்கொடை தொகுதியில் சிங்கள பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த வரவேற்புடன் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து தடவைகள் பாராளுமன்றம் சென்ற ஒரு புகழ்பெற்ற அரசியல்வாதிதான் மொஹமட் லெப்பை மரிக்கார் அபூசாலி, அபூசாலி எழுதிய "தர்பர் ஜெய்லானி" என்ற நூல் ஜெய்லானி பள்ளியின் வரலாற்றைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றது. "ஈராக்கினைச் சேர்ந்த சன்மார்க்கப் போதகரும், அறிஞருமான குதுப் முஹியத்தீன் அப்துல் காதர் ஜீலானி அவர்கள் பாவா ஆதம் மலையை தரிசிப்பதற்காக கி.பி 1132 இல் இலங்கைக்கு வந்துள்ளார். அப்போது அவர் இன்றைய ஜெய்லானி பள்ளிவாசல் காணப்படுகின்ற மலையில் 12 வருடங்கள் நோன்பு நோற்று தியானத்தில் ஈடுபட்டுள்ளதாக "பார்த்தசாரதி நாயுடு" மற்றும் "சத்துர ஷங்காரம்" எனும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் முஹியத்தீன் அப்துல் காதர் ஜீலானியின் ஞாபகார்த்தமாக தப்தர் ஜெய்லானி என இப்பிரதேசத்திற்கு பெயர் சூட்டப்பட்டு இம்மலைப் பிரதேசத்தினை பாரம்பரிய வணக்கஸ்தலமாக முஸ்லிம்கள் மாற்றிக் கொண்டு தொடர்ச்சியாக இங்கு வர ஆரம்பித்துள்ளனர். வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி 1922இல் இங்கே ஒரு கற்குகையை கூரையாக வைத்து இந்த பள்ளி கட்டப்பட்டுள்ளது".

### ஜெய்லானி பள்ளியின் இன்றைய நிலை

பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களினால் கொடியேற்றம் செய்யப்பட்டு சமய வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஜெய்லானி பள்ளிவாசலில் ஐந்து நல்லடியார்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன.




ஆனால் கடந்த 2021ஆம் ஆண்டு இரவோடு இரவாக இரண்டு அடக்கஸ்தலங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இந்த நாசகார செயலை செய்தது தொல்பொருள் திணைக்களமும் விகாரையுமே என ஊர் மக்கள் கூறுகின்றார்கள். நாங்கள் இது பற்றி தொல்பொருள் திணைக்களத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் வினவியபோது, குறித்த இரண்டு அடக்கஸ்தலங்களையும் உடைப்பதற்காக தாங்கள் ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை என அவர்கள் கூறினார்கள். 10 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட ஜெய்லானி பள்ளிவாசல் மற்றும் அதனை சூழ இருந்த இயற்கை எழில் நிறைந்த பகுதிகள் எதுவும் இன்றில்லை. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான விகாரையும் ஒரு நிமிர்ந்த சிங்கம், கப்பல் வடிவிலான மலையுச்சி மற்றும் புதிதாக நடப்பட்ட அரச மரங்கள் பலவற்றை அங்கே நீங்கள் காணலாம். பள்ளிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு நீங்கள் செல்லவேண்டியது ஐந்து அரச மரங்களைத் தாண்டி ஒரு விகாரையின் தூபிக்கு கீழால் உள்ள வாயிலின் ஊடாகவே ஆகும். முஸ்லிம்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் பல தரைமட்டமாக்கப்பட்டுள்ளதுடன் உடைக்கப்பட்ட ஸியாரங்களுக்கு மேலாக புதிய அரச மரங்களும் அங்கே நடப்பட்டுள்ளன.

ஜெய்லானி பள்ளிக்குள் நாம் உட்கார்ந்து இருக்கும்போது, ஒரு சிங்கள சகோதரர் 10, 15 பேருடன் அங்கே வந்து பள்ளியின் உட்பகுதியை காட்டி "இங்கே புத்த பெருமானுடைய ஒரு சிலை இருந்துள்ளது. அதனை உடைத்து தான் இவர்கள் பள்ளியை கட்டி இருக்கிறார்கள். நல்ல வேளை கோட்டாபய ராஜபக்ஷ சவேந்திர சில்வா போன்ற வீரம் படைத்த அரசியல்வாதிகள் இருந்ததால் இந்த புனித பூமி காப்பாற்றப்பட்டுள்ளது. நான் அரசியல் பேசவில்லை ஆனால் இதுதான் உண்மை" என இரண்டே நிமிடத்தில் அவர் அறிந்த ஜெய்லானி பள்ளியின் வரலாற்றை பிறருக்கும் எத்தி வைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதை தொடர்ந்து கூரகல விகாரையின் புனர்நிர்மாணப் பணிகள் மின்னல் வேகத்தில் இடம்பெற்றன. சுமார் இரண்டு வருடங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட இந்த புனரமைப்பு பணிகளுக்கு வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களினால் நிதியுதவி வழங்கப்பட்டதாக நெல்லிகல தேரர் தெரிவித்திருந்தார். இதன் நிர்மாணப் பணிகளுக்கும் இலங்கை இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்பு படை ஆகியவற்றின் முழுநேர பூரண ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றது. கடந்த 2022 வெசாக் தினத்தின் போது (மே7) அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவினால் புனரமைப்பு செய்யப்பட்ட கூரகல உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

அரச மரங்கள் நடப்பட்டுள்ள திறந்தவெளியில் இருந்து நேராக சென்று மேலே ஏறினால் 40 அடி உயரமான தூபி ஒன்றினை காண முடியும். அங்கிருந்து வலது புறத்திலே ஒரு மிகப்பெரிய பௌத்த கொடி மலைக்கு மேலே அசைந்து கொண்டிருக்கின்றது. எனக்கு அருகில் இருந்த ஒரு வயோதிப பௌத்த மத சகோதரர் அவருடைய வயது முதிர்ந்த மனைவியை நோக்கி ஒரு பெருமிதத்துடன் "அங்கே பார், முஸ்லிம் பள்ளிக்கு மேலே அந்த பௌத்த கொடி நடப்பட்டுள்ளது". இப்பள்ளிவாசலை இலகுவில் அடையாளம் காண்பதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த மினாரா (வரவேற்பு கோபுரம்) கடந்த வருடம் பலவந்தமாக உடைக்கப்பட்டது. அந்த இடத்திலே இன்று ஒரு மிகப்பெரிய பௌத்த கொடி பறந்து கொண்டிருக்கிறது.

முஸ்லிம் கடைகளுக்கு செல்ல விடாமல் தடுக்கின்ற இராணுவத்தினர்

நாங்கள் விகாரையை முழுமையாக பார்வையிட்டு கீழே இறங்கும் போது வலதுபுறத்திலே மிக உயரமான மதில்கள் கட்டப்பட்டிருந்தன. அந்த மதில்களுக்கு வெளியே இருந்து ஒரு சில வியாபாரிகள் தண்ணீர் போத்தல்களையும் ஐஸ்கிரீம்களையும் விற்பனை செய்து கொண்டிருந்ததை அவதானித்தோம். அவர்களுடைய கடைகள் பாதையோரமாக இருந்தாலும் கொஞ்சம் பதற்றத்துடனே அங்கே அவர்கள் பொருட்களை விகாரையில் இருந்து கீழே இறங்குகின்ற சிங்களவர்களுக்கு விற்றுக் கொண்டிருந்தார்கள். மிகவும் களைப்பாக இருந்ததால் நாங்கள் கீழே சென்று பிரதான பாதையின் ஊடாக அந்த கடைகள் இருக்கின்ற பக்கத்திற்கு வந்தோம். அப்போது இராணுவத்தினரால் அந்தப் பாதை மூடப்பட்டு ஆயுதம் ஏந்திய ஒரு இராணுவ வீரன் உங்களை மேலே உள்ள முஸ்லிம் கடைகளுக்கு செல்ல அனுமதிக்க முடியாது என மறுத்தார்.

ஏன் செல்ல முடியாது ?

உங்களை அனுப்பினால் தேரர் எமக்குத்தான் ஏசுவார் !!

அங்கே இலங்கை இராணுவத்தினருக்கு கட்டளையிடுவது கூரகல விகாரையினை அமைத்த நெல்லிகல தேரர்!

நாங்கள் ஊடகவியலாளர்கள் என குறித்த இராணுவ வீரனிடம் தெரிவித்த பின்னரே எங்களை அவர் முஸ்லிம் கடைகள் உள்ள பகுதிக்கு அனுப்பினார்.

அங்கே சென்றதும் நான் கேட்ட முதல் கேள்வி, ஏன் எங்களை வரவிடாமல் தடுத்தார்கள்.

"உங்களை மட்டுமல்ல விகாரைக்கு வருகின்ற எவரையும் எங்கள் கடைகளுக்கு வர அனுமதிக்க மாட்டார்கள்.


ஏன் என்று கேட்டால் 'நீங்கள் பல வருடங்களாக பள்ளிக்கு வருகின்ற முஸ்லிம்களிடம் இருந்து சம்பாதித்து விட்டீர்கள். இனிமேல் விகாரைக்கு வருகின்ற பௌத்தர்களிடமிருந்து பௌத்த வியாபாரிகள் சம்பாதிக்கட்டும். உங்களுக்கு நாங்கள் சம்பாதிக்க இடம் தர மாட்டோம்" என கூறினார்களாம்.

இது பற்றி நாங்கள் இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஐ எச் எம் ஆர் கே ஹேரத்திடம் வினவினோம். அது பற்றி ஆராய்ந்து பதில் தருவதாக கூறி இரண்டு நாட்கள் கழித்து அந்தப் பகுதிக்கு பொறுப்பான இராணுவ பொறுப்பதிகாரியிடம் தாம் வினவியதாகவும் அவர் அத்தகைய தடுப்புக்கள் எதுவும் அங்கே இல்லை என தமக்கு கூறியதாகவும் பிரிகேடியர் ஐ.எச்.எம்.ஆர்.கே. ஹேரத் கூறினார்.

மேலும் நாங்கள் இது பற்றி மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இலங்கை இராணுவத்திற்கு கடந்த ஜூலை மாதம் விண்ணப்பம் ஒன்றை அனுப்பினோம். எனினும் அதற்கு உரிய பதில்கள் கிடைக்காததன் காரணமாக கடந்த அக்டோபர் மாதம் மேல்முறையீடு ஒன்றை மேற்கொண்டோம். கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் ஆகியும் இன்னும் இலங்கை இராணுவத்திடமிருந்து எந்த ஒரு பதிலும் கிடைக்கப் பெறவில்லை.

நாங்கள் அங்கே இருந்த கடைக்கு சென்று ஒரு குவளை தண்ணீரை குடிப்பதற்கு முன்னரே மதிலோரமாக ஐஸ்கிரீம் விற்றுக் கொண்டிருந்த, அந்தக் கடையின் உரிமையாளரின் மகன் கையில் இருந்தவற்றை தூக்கிக் கொண்டு "ரங்க வருகிறான், ரங்க வருகிறான்" என்றவாறு கூறிக்கொண்டு கடைக்குள்ளே ஓடி வந்து ஒளிந்து கொண்டான்.

தொடரும்...








# ஏன் இந்த அநீதி

## மட்டக்களப்பில் காணி உரிமையற்றவர்களாக ஆக்கப்படும் முஸ்லிம் சமூகம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

கடந்த 30 ஆண்டு காலம் வடக்கு கிழக்கில் நிலவிய ஆயுத வன்முறைகள் காரணமாக சிவில் நிர்வாகமும் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்திருந்ததால் குடிமக்கள் பலவகையான இழப்புக்களுக்கும் நீதிக்குப் புறம்பான பல அநியாயங்களுக்கும் ஆட்பட்டிருக்கிறார்கள்.

இந்த வகையில் முஸ்லிம்கள் தமது பூர்வீக வாழ்விடங்களை விட்டு நேரடியாக, பலாத்காரமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

தமிழர் உரிமை என்று கூறிக்கொண்டு ஆயுதம் ஏந்திப் போராடிய வன்முறையாளர்களோடு ஒத்துப் போகாத காரணத்தினால் முஸ்லிம்களுக்கு உயிரச்சுறுத்தல்களும் நெருக்கடிகளும் கெடுபிடிகளும் கொடுக்கப்பட்டிருந்தன. அதனால், அவர்கள் தங்களது வாழ்விடங்களையும் அசையும் அசையாச் சொத்துக்களையும் கைவிட்டு பாதுகாப்பான வேறோர் இடத்திற்கு நகர வேண்டியேற்பட்டிருந்தது.


தற்சமயம் ஆயுத வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள சூழ்நிலையில் இவ்வாறு அடாத்தாகத் தமது காணிகளையும் மற்றுமுள்ள அசையும் அசையாச் சொத்துக்களையும் பறிகொடுத்து இன்னமும் ஏக்கப் பெருமூச்சோடு உள்ள முஸ்லிம் சமூகத்தவர்களுக்கு நிம்மதி தரக்கூடிய எந்தவித ஏற்பாடுகளும் இல்லாதிருப்பது கவலையளிக்கின்றது.

அரச காணிகளை ஆக்கிரமிப்புச் செய்வதையோ அல்லது அடுத்தவரின் காணிகளை அடாத்தாகப் பிடிப்பதையோ முஸ்லிம்கள் கோரவில்லை. அவர்கள் தமது சொந்த பூர்வீகக் காணிகளையே மீளப் பெற்றுத் தருமாறு கோரி நிற்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கான காணிப் பிரச்சினை என்பது பூதாகரமாக உருவெடுத்திருக்கின்றது.

அதன் ஒரு துளிதான் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினை.

அதன் ஒரு வெளிப்பாடாகவே இந்த தொடரில் சற்று விரிவாக குறிப்பிடுகிறோம்.




மட்டக்களப்பு மாவட்டம் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தம் 14 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 10 பிரதேச செயலாளர் பிரிவுகள் பெரும்பான்மையாக தமிழர் சமூகத்தைக் கொண்டமைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் நிருவாகக் கட்டமைப்பு 1992ம் ஆண்டு தொடக்கம் அரச சேவையை பொதுமக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் அப்போதிருந்த 12 உள்ளூராட்சிமன்ற எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு 12 பிரதேச செயலாளர் பிரிவுகளாக உருவாக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நிருவாகத்தில் முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வந்துள்ளனர்.

இந்தக் காலகட்டத்திலே புலிகளின் ஆதிக்கத்தின் மத்தியில் அவர்கள் நிர்வாக ரீதியில் பல இன்னல்களையும் தடைகளையும் அனுபவித்து வந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் 2020ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புள்ளிவிவரவியல் கையேட்டின் தகவல்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 24 ஆயிரத்து 379 தமிழர்களும் 1 இலட்சத்து 50 ஆயிரத்து 457 முஸ்லிம்களும் வாழ்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர் நகரம், கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி ஆகிய 4 பிரதேச செயலகப் பிரிவுகளில் 30 சத வீதம் வாழ்கின்ற முஸ்லிம்கள் ஒட்டு மொத்த மட்டக்களப்பு மாவட்ட காணிகளில் வெறும் 1.3 வீதக் காணிகளுக்குள்ளேயே முடக்கி, அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமுள்ள 2640 சதுர கிலோமீற்றர் காணிகளில் 2584 சதுர கிலோமீற்றர் காணிகள் தமிழர்களுக்கும் நடைமுறையில் வெறும் 16 சதுர கிலோமீற்றர் காணிகளே முஸ்லிம்களுக்கும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இன விகிதாசாரப்படி பார்த்தால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்கு சுமாராக 800 சதுர கிலோமீற்றர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03ஆம் திகதி பனம்பலானவைத் தலைவராகக் கொண்டு எல்லை நிர்ணய ஆணைக் குழுவை நியமித்தார். அப்போது ரட்ணசிறி விக்ரமநாயக்க பொது நிர்வாகம், உள்துறை மற்றும் பெருந்தோட்ட தொழில் துறைகள் அமைச்சராக இருந்தார்.

பனம்பலான கொமிஷன் எனப்படும் அந்த எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை, ʻயயெஅடியடயயெ ஊழஅஅளைளழைெ சுநிழசவ 2000ம் ஆண்டு ஜுலை 13ம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அனுமதியும் வழங்கப்பட்டது. அப்போது தலைவர் அஷ்ரப் அவர்களும் அமைச்சராக இருந்தார்.

அரசாங்கத்தின் நிருவாகம் மற்றும் அபிவிருத்தித் தேவைகளுக்காகவும் மக்களின் தேவைகளுக்காகவும் 05 வருடங்களுக்கு ஒருமுறை, எல்லை மீள் நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டு இலங்கையின் நிருவாகக் கட்டமைப்பில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது பொதுக் கொள்கையாகும்.

இக்கொள்கைக்கு அமைவாக, 1999ம் ஆண்டு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட பனம்பலான ஆணைக்குழுவின் சிபார்சுக்கு அமையவும் 2000.07.13ம் திகதிய அமடபஃ00ஃ1155ஃ05ஃ65ம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமையவும் நாட்டில் 08 பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட 08 பிரதேச செயலகங்களில் 07 பிரதேச செயலகங்கள் ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தில் கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் அளவில் நிலப்பரப்பு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டு இன்றளவும் இயங்கி வருகின்றன.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி எனும் முஸ்லிம் சமூக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகம் ஆணைக்குழு மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு ஏற்ப வழங்கப்பட்ட 240 சதுர கிலோமீற்றர் பரப்பளவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் ஆகியவை இதுவரையில் நில அளவை செய்து, எல்லை நிர்ணயம் செய்ய விடாமல் மட்டக்களப்பு மாவட்டச் செயலக நிருவாகம் பாரபட்சம் காட்டி தடுத்து வருகிறது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள போதிலும், நிருவாக எல்லைகள் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படாது 23 வருடங்களாக இயங்கிவருவது இலங்கை நிருவாகப் பொறிமுறையில் காணப்படும் பாரிய குறைபாடாக இருந்துவருகின்றது.

இப்பிரதேச செயலகம் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படாதுள்ளதால் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரிகளும், பொதுமக்களும் நிருவாக ரீதியில் பல்வேறு இடர்களை சந்தித்து வருகின்றனர்.

### பனம்பலான ஆணைக்குழுவின் பரிந்துரை

1999.06.03ம் திகதி பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் டி.எல்.வி.வி.ஏ. பனம்பலான தலைமையில் நியமனம் செய்யப்பட்ட பனம்பலான ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் நிருவாக ரீதியாக அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களை ஆய்வறிந்தது.

இந்நடவடிக்கையின்போது பனம்பலான ஆணைக்குழு அந்தந்த பிரதேச மக்கள், பொது அமைப்புகள், அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் அபிப்பிராயங்களையும், ஒப்புதல்களையும் பெற்று தனது அறிக்கையினைத் தயாரித்தது.

 நாட்டில் சில பிரதேச செயலகங்கள் குறைவான சனத் தொகையுடன் மிகப்பாரியளவிலான சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் தமது நிருவாகத்தை மேற்கொண்டு வருகின்றன. இதனால் மக்களின் தேவைகளை அடையாளம் காணுதல், அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன.

* குறித்த செயலகங்களுக்கான உள்ளூராட்சி மன்றங்கள் இந்நிலைமையினால் பாரிய நிதிப் பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்றன.

* குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வதியும் பொதுமக்கள் நிருவாக ரீதியாக ஒரு பிரதேச செயலகத்திலும் அரசியல் ரீதியாக பிறிதொரு உள்ளூராட்சி மன்றத்திலும் என வெவ்வேறான கட்டமைப்பில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

> மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கான காணிப் பிரச்சினை என்பது பூதாகரமாக உருவெடுத்திருக் கின்றது. அதன் ஒரு துளிதான் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினை.

மேற்படி காரணங்களை அடிப்படையாக கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகம் ஆகிய இரண்டு புதிய பிரதேச செயலகங்களை பனம்பலான ஆணைக்குழு பரிந்துரை செய்தது.

இப்பரிந்துரையானது நாட்டின் ஒருமைப்பாடு, சகவாழ்வு, சமூகங்களுக்கிடையிலான சரியான பங்கீடு என்பவற்றை உறுதிப்படுத்தும் என்பதோடு பொதுமக்கள் தமது தேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் ஏற்படுத்தவல்லதாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.






களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் 105வது ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழனன்று (09) பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி சப்ரி கலந்து கொண்டதுடன், கௌரவ விருந்தினராக இலங்கைக்கான சீனத் தூதுவர் பங்கேற்றிருந்தார். 1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியானது நாட்டிற்காக உழைக்கின்ற பல்லாயிரக்கணக்கானவர்களை உருவாக்கி களுத்துறை மாநகரில் தேசிய பாடசாலையாக விருட்சமாகி தற்போது 105வது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றமை சிறப்பம்சமாகும்.

# மதரஸாக்களில் அரபு மொழியோடு அதுவும் போதிக்கப்படுவது மிகவும் இன்றியமையாததாகும்

## பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா





(பீ.எம்.முக்தார்)

எனது மதரஸாக்களில் அரபு போதிக்கிற அதே நேரம்,அரபு - நல்லொழுக்கம் போதிப்பதாக தெரியவில்லை. பெரும்பாலான மதரஸா மாணவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும் போதே இவ்வாறு கேட்க தோன்றுகிறது என்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அலிஸ ாஹிர் மௌலானா கூறினார்.

பேருவளை சினன்கோட்டையில் 49 வருடங்களாக இயங்கி வரும் வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் 42 வது வருட மீலாது விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்று (4-11-2023) மாலை அல்-/ஹமைஸ ராவின் எஸ்.எம்.ஜாபீர் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.ஏ.முக்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அலிஸாஹிர் மௌலானா மேலும் கூறியதாவது,

ஜூம்மா பிரச்சாரங்களை நிகழ்த்தும் எமது பெரும்பாலான மௌலவிமார்கள் கூட குத்தபா பிரசங்க மிம்பர்களையும் அரசியல் மேடைப் பேச்சுக்களைப் போன்று ஆவேசமாக நிகழ்த்துவதைக் காண்கிறோம். சன்மார்க்க பிரசங்கங்களுக்கு இது அழகல்ல.

மதரஸாக்களில் கற்று வெளிவந்தவர்கள் இஸ்லாம் இயம்பும் நல்லொழுக்க நற்பண்புகளுக்கு இலக்கணமாக திகழ வேண்டும. இதற்கு வழிவகுக்கும் வகையில் கல்வி போதனைகள் அமைய வேண்டும்.

பாலஸ்தீனத்தில் தினந்தோறும் பல நூற்றுக்கணக்கான எமது சகோதரர்களின் உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சிகரமாக கொண்டாட்டங்கள் எடுக்கிற நேரம் அல்ல. ஆனால் எமது உயிரிலும் மேலான உத்தம நபியின் பிறந்த தின விழா மேடை என்பதாலேயே இங்கு வருகை தந்தேன். பலஸ்தீனத்தில் நடந்தேறும் பரிதாப நிலை கண்டு பிற சமூகத்தவர்களே இஸ்ரேலை கண்டிக்கவும் பலஸ்தீன போராளிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும் முன் வருகிறார்கள். இது மனிதாபிமான நல்லெண்ணத்தையே காட்டுகிறது என்றார்.

சிலப்பதிகார கலந்து கொண்ட லீடர்ஷிப் சர்வகலாசாலை ஸ்தாபகர் கலாநிதி ரயிஸ் மீரா உரையாற்றுகையில் கூறியதாவது,

உலகில் தோன்றிய 124000 நபிமார்களில் இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவரே முஹம்மத் (ஸல்) அவர்கலாவார்கள். அவரின் உம்மத் என்ற வகையில் நாம் பெருமைப்பட வேண்டும். திருமறை கூறும் இஸ்லாத்தில் இணைந்த ஒரு சிலருள் நாமும் உள்ளடங்குகிறோம். இதற்காகவும் அல்லாஹ் எமக்கு அளித்திருக்கும் நிஃமத்துகளுக்காகவும் நாம் பெருமைப்படுவதோடு அல்லாஹ்வுக்கு நன்றியுடையவர்களாகவும் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.



காசாவில் நடக்கும் மிலேச்சத்தனங்களுக்காக எங்களால் துவா பிரார்த்தனை தான் செய்ய முடியும். இதுதான் மிக சக்தி வாய்ந்த ஆயுதம் ஆகும்.

வாலிபர் கழரா ஜமாத்தின் தலைவர் இமாம் ஹஸன் முர்ஸியின் வரவேற்புரையுடன் இடம்பெற்ற இந்த வைபவத்தில் இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் கலாநிதி ஸூ ஹைர் முஹம்மத் ஹம்தெல்லாஹ் கௌரவ அதிதியாகவும் மற்றும் சிறப்பதிதிகளாக பாலஸ்தீனத்துக்கான முன்னாள் இலங்கை தூதுவர் பவ்ஸ ான் அன்வர், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம், களுத்துறை உதவி பொலீஸ் அத்தியட்சகர் துமின்த ராஜபக்ஷ, பேருவளை பொலீஸ் நிலைய பொதுப்பதிகாரி லலித் பத்மகுமார், கொழும்பு தெவட்டகறை பள்ளி மற்றும் சூபி தரீக்கா நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ரியாஸ் ஸாலி,எம். ரி.எம்.ஹாரிஸ்,மதனி நஜிமுத்தீன் உள்ளிட்ட அதிதிகள் அனைவருக்கும் ஹழரா ஜெமாத் சார்பாக நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.

சீனன்கோட்டையைச் சூழ இயங்கும் குர்ஆன் மத்ரஸாக்களைச் சேர்ந்த வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு தங்க நகை உள்ளிட்ட பரிசில்களும் சன்றிதழ்களும் அதிதிகளால் கையளிக்கப்பட்டன.

வாழிபர் ஹழரா ஜெமாத் செயலாளர் டாக்டர் முர்ஷித் ரிஸாம் நன்றியுரை வழங்கினார்.

போட்டியிட்ட மதரஸாக்களில் அதிகூடிய 92 புள்ளிகளைப் பெற்ற அக்கரகொட தாஜ/ல் மபாஹிரிய்யா குர்ஆன் மதரஸா முதலிடம் பெற்று வெற்றியீட்டிக் கொண்டது. குட்டி மலை ஜலாலியா குர்ஆன் மதரஸ ா 66 புள்ளிகளோடு இரண்டாம் இடத்தையும்,சமகிபுர யாக்கூத்தியா குர்ஆன் மதரஸா 30 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

கல்வித்துறையில் திறமை, ஆற்றல்களை வெளிக்காட்டும் இப் பிரதேச மாணவ,மாணவிகள் பலருக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காசா போர்...

(05ம் பக்கத் தொடரச்சி)

தினமும் பல கட்டிடங்கள் தீ பற்றி எரிகிறது.

ஆனாலும், இஸ்ரேல் அரச தலைமை இதையெல்லாம் மிகவும் கவனமாக மறைத்து வருகிறது என்பதே உண்மையாகும்.

தற்போதைய நிலையில் தினமும் நான்கு மணி நேரம் மட்டுமே போர் நிறுத்தம் செய்ய இஸ்ரேல் ஒப்புதல் வழங்கி இருப்பதாக தெரிகிறது. இது காலத்தின் கட்டாயம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

உண்மையில் இந்த போர் எப்போது முழுமையாக முடிவுக்கு வரும் என்று நம்மால் தற்போது அறுதியிட்டு கூற முடியாது. ஆனாலும், இந்த போரின் முடிவில் இஸ்ரேல் இராணுவம் அவமானத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் தான் வெளியே வரும் என்பது தான் யதார்த்தமான உண்மை நிலையாக இருக்கிறது. ஆனால், அப்பாவி குழந்தைகள் மற்றும் பெண்களை படுகொலை செய்த காட்டுமிராண்டித்தனமான, கோழைகள் இஸ்ரேலிய இராணுவம் தான் என்கிற அவப் பெயரை அவர்கள் முழுமையாக பெற்று விட்டார்கள். இந்த கறை படிந்த வரலாறு இஸ்ரேல் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள கருப்பு பக்கம் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இந்த சூழலில், இஸ்ரேலிய இராணுவம் மத்திய தரைக்கடல் பகுதியில் தனது வல்லாதிக்க சக்தியை பயன்படுத்தி இனி ஒரு போதும் பூச்சாண்டி காட்ட முடியாது. ஏனெனில் இஸ்ரேல் இராணுவத்தின் பலத்தைஉலகம் முழுமையாக அறிந்து கொண்டு விட்டது என்பதே உண்மையாகும்.இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாத், இராணுவத்தின் ஆயுத பலம், அணு ஆயுதத்திற்கு ஒப்பான குண்டுகள் எல்லாவற்றையும் ஹமாஸ் இயக்கம் சிதறடித்து விட்டதால் , இனி அந்த பெயரை எந்த சக்தியாலும் மாற்ற முடியாது. உலகின் சக்தி வாய்ந்த 70 டன் மெக்கோவா டேங்கர்களை ஹமாஸ் இயக்கத்தினர் ராக்கெட்களை வீசி பற்றி எரிய செய்து முழுமையாக அழித்து விடும் வீடியோக்கள் தினமும் வெளியாகி வருவது தான் இஸ்ரேலிய இராணுவத்திற்கு மிகப் பெரிய அளவில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த போரில் இது வரை பாலஸ்தீன மக்கள் 11,000 பேருக்கு மேல் படுகொலை செய்யப்பட்டு விட்டனர் .

26,000 பேர் மிகவும் கடுமையான காயம் அடைந்து உள்ளனர். இவர்களில் பலர் ஊனமுற்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர் . இவர்களின் தியாகம் ஒரு போதும் வீணாக போக வாய்ப்பே இல்லை. இந்த தியாகம் நிறைந்த , மனித குலத்தின் இரத்தம் வழிந்தோடிய பூமியான பாலஸ்தீனம் சுதந்திர காற்றை மிகவும் விரைவில் சுவாசிக்க போகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதற்கான காலமும், நேரமும் கனிந்து வருகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.....

மழலைகளின் ரத்தம் சிந்திய அந்த தியாகம் ஒரு போதும் வீணாக போய்விடாது. அதற்காகவே நாம் காத்திருப்போம்.....!

## மனநலமும் ஆலோசனையும் 05

# அவசரமா? அமைதியா?



காரணம் இல்லாமல் அவசரமாய் ஓடும்போது நிச்சயம் தோல்வியையே சந்திப்போம். காரணத்தைத் தெரிந்து ஓடும்போது வெற்றி நம்மைத் தேடி வருவதை எளிதாகவே காண்போம்.

அவசரம் எவரிடம் இருக்கிறதோ அவரிடம் எப்போதும் ஒரு வேகம் இருந்து கொண்டே இருக்கும். இது அவரது வாழ்க்கையின் தரத்தை குறைத்து, பொறுமையை இழக்கச் செய்துவிடும். பகுத்தறிவை களவாடி ஆவேசத்தை அதிகரிக்கச் செய்துவிடும்.

நாம் விடயங்களை செய்ய அவசரமாக ஓடுகிறோம் என்றால் நாம் வலிகளின் பின்னால் ஓடுகிறோம்! நம்மிடமிருந்தும் நம்மை படைத்த இறைவனை விட்டும் ஓடுகிறோம்! என்பதையே நாம் பொருளாக கொள்ள வேண்டும்.

அவசரத்தில் இருந்தும் அவசரக் கோளாறின் அகோர பிடியில் இருந்தும் எம்மை பாதுகாத்து ஒரு அழகான அமைதியான வாழ்க்கையை வாழ சில இலகுவான வழிகளை தெரிந்து கொள்வோம்.

ஒவ்வொரு நாளையும் புதிய நாளாகக் கொண்டாடுங்கள். ஒவ்வொரு புதிய நாளும் பல அதிர்ஷ்டங்களை சுமந்து வருகிறது. அவற்றை அனுபவிக்க அவகாசம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் எங்கள் கடைசி மூச்சு இருக்கும் வரை அந்த நாள் எங்களை மீண்டும் ஒருபோதும் சந்திப்பதில்லை.

நேரத்தை பார்த்துப் பார்த்து அதன் ஓட்டத்தில் ஓடி, நேரத்தின் கட்டுப்பாட்டில் சிக்கிக் கொள்ளாமல் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். நேரம் உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பல பணிகளை ஒரே நேரத்தில் செய்வதை நிறுத்துங்கள். உதாரணமாக, இரவு உணவைச் சாப்பிடும் போது, தெருவில் நடக்கும்போது அல்லது ஒருவருடன் அமர்ந்திருக்கும்போது தொலைபேசியில் பேசாதீர்கள்.

நீங்கள் உங்கள் குடும்பத்தோடு பேசுகிறீர்கள் என்றால், குடும்பத்தோடு பேசுங்கள். அதாவது ஒரு வேலையின் மீது அவதானம் செலுத்துங்கள். அப்படிச் செய்யும்போது அழகான முடிவும் மனத் திருப்தியும் கிடைப்பதை உணர்வீர்கள்.

உங்கள் அனைத்து பணிகளில் இருந்து விலகி ஒரு நாளை அமைதியாக கழிக்க ஏற்பாடு செய்யுங்கள். நீங்கள் அமைதியாக இருக்கும் போதும் அமைதியை உணரும் போதும் உங்கள் வேலைகளின் வேகம் நிதானம் அடைய வேண்டும் என்ற உணர்வு உங்களில் உருவாக ஆரம்பிப்பதை உணர்வீர்கள்.

ஒரு நிகழ்ச்சிக்கு பிறகு அல்லது விமானத்தை விட்டு வெளியேறும் போது அல்லது ஒரு விழாவில் இருந்து வரும் போது யாரையும் முந்திக்கொண்டு விறுவிறுப்பாக வருவதை தவிர்த்து அமைதியாக வர முயற்சி செய்து பாருங்கள். மற்றவர்கள் உங்களுக்கு முன்னால் வெளியேற அவர்களுக்கு அன்பாக அனுமதி கொடுத்துப் பாருங்கள். ஆச்சரியப் படுவீர்கள். இந்த மரியாதையான செயல் உங்கள் மனதை அமைதிப்படுத்துவதோடு, மற்றவர்களுக்கும் அவர்களது நேரத்தை எடுத்துக்கொள்ள ஊக்குவிப்பு கொடுத்த அழகான உணர்வை அனுபவிப்பீர்கள்.

மற்றவர்களிடம் ”நான் மிகவும் பிஸியான நபர்” என்று சொல்ல உங்கள் மனதுக்கு அனுமதி கொடுக்காதீர்கள். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அதற்கு பதிலாக ”நான் மிகவும் பொறுமையான நபர்” என்றோ என்னால் விடயங்களை நிர்வகித்துக் கொள்ள முடியும் என்றோ சொல்லுங்கள். இந்த சுயவிளக்கம் உங்கள் நடத்தையை எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதைப் பாருங்கள்.

ஒருவரிடம் “எனக்கு நேரமில்லை“ என்று கூறும் பலரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதன் அர்த்தம் ஆழமானது, நீங்கள் அல்லது உங்கள் வேலை எனக்குப் முக்கியமில்லை என்பதுதான் அதன் உள்ளார்ந்த அர்த்தம். எவராயினும் தேவையான எதையாவது கேட்கும் போது அதற்கு முன்னுரிமை கொடுத்து சற்று அமைதியாக செவிமடுத்துப் பாருங்கள். அவர் என்ன சொல்ல வருகிறார் என்று கேட்பதற்கு மனதிற்கு இடம் கொடுங்கள். அது நீங்கள் பொறுமையானவர் மற்றும் பொறுப்பானவர் என்பதை அவருக்குப் போன்று உங்களுக்கும் புரிய வைக்கும்.

கோபப்படுவதில் நிதானம், நியாயந்தீர்ப்பதில் நிதானம், பிரச்சினைகள் தீர்ப்பதில் நிதானம் இப்படி அனைத்து விடயங்களிலும் நிதானத்தை கடைப்பிடியுங்கள். நிதானம் அவசரத்தை அழகாக கட்டுப்பட வைக்கும் என்பதை இலகுவாக புரிவீர்கள்.

ஏதாவது ஒன்றுக்கு அல்லது யாராவது ஒருவருக்கு உடனடியாக எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக, சில நிமிடங்களுக்கு உங்களை இடைநிறுத்தி ஆறுதலாக பதில் கொடுங்கள். ஆறுதலான உங்கள் பதில் உங்களை அமைதிப்பட வைக்கும். அவரை ஆச்சரியப்பட வைக்கும்.

”வாழ்க்கை மிகவும் குறுகியது, நாம் அனைவரும் மெதுவாகச் செல்ல வேண்டும்” என்பதை ஆழமாக ஏற்றுக்கொண்டால் குறுகியதொன்றில் அவசரம் என்ற ஒன்று இருக்கவே கூடாது என்பதை புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் நிலைத்தன்மை வலயத்தை அடையாளம் காண கற்றுக் கொள்ளுங்கள்.

நிலைத்தன்மை வலயம் என்பது உங்களை பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும், நிதானமாகவும் உணர வைக்கும் இடங்கள் அல்லது விடயங்கள். மனிதர்கள், பொருள்கள் போன்றனவாகும். அல்லது வெளி உலகத்திற்கு எதிராக உங்களைப் பாதுகாக்கும் யோசனைகளாகவும் அவை இருக்கலாம்.

மனைவியின் பிள்ளைகளின், பெற்றோரின் அன்பையும் மரியாதையையும் நீங்கள் உணர்வதை அவர்களுக்கு புரியவையுங்கள். நல்ல நண்பர்களின் இணைப்புகளை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

உங்களை எப்போதும் சிரிக்க வைக்கும் விடயங்கள் மீது அவதானம் செலுத்துங்கள்.

எப்போதும் அமைதியாக, நிதானமாக பணியாற்றுவதற்கான மனதை வேண்டி இறைவனிடம் அன்றாடம் பிரார்த்தனை செய்யுங்கள்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# ஐ.நா சமூக மன்றத்தில் ரிஸ்வி முஃப்தியின் உரையும் பலஸ்தீனம் தொடர்பான கடிதம் ஒப்படைப்பும்!



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முஃப்தி 2023.11.03 ஆம் திகதி ஜெனீவாவிற்கு குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு நடைபெற்ற ஐ.நா வின் சமூக மன்ற மாநாட்டில் பங்கேற்று உலகளாவிய ரீதியில் முன்னிலை வகிக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுரையை முன்வைத்ததோடு ஐ.நா சபை வளாகத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதில் அன்றைய தினம் ஜும்ஆ பிரசங்கமும் நிகழ்த்தினார்கள்.

இலங்கை அறிஞர்களை பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த ஜெனீவா சமூக மன்ற மாநாட்டில் கலந்து கொண்ட ஜம்இய்யாவின் தலைவர் அவர்கள் மனித உரிமைகளை மறுசீரமைப்பதில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வகிபாகம் எத்தகையது என்பது குறித்து அனுபவ ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் தனது பரிந்துரைகளை முன்வைத்தார்கள்.

அத்தோடு ஐ.நா வளாக மஸ்ஜிதில் ஆற்றிய ஜும்ஆ உரையில் உலகில் மனித உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் எனவும், சமூக நீதியும் சகவாழ்வும் நிலைநாட்டப்படுவது அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டதோடு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களினால் உருவாக்கப்பட்ட, உலகில் எழுதப்பட்ட முதலாவது அரசியல் சாசனமாக கருதப்படும் மதீனா சாசனத்தின் சிறப்பம்சங்களும் மிகச்சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது.

சமூக நீதி மற்றும் சகவாழ்வை ஒரு பன்முக சமூகத்தில் நிலைநாட்ட மதீனா சாசனம் எவ்வகையில் பங்களிப்பை செய்தது என்பதை விளக்கியதுடன் அந்த சாசனத்தை இன்றைய உலகில் நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதன் அவசியமும் குறித்த உரையில் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து பல்லின சமூகங்களுக்கு மத, கலாசார, நம்பிக்கைகள் விடயத்தில் சகிப்புத்தன்மை, பரஸ்பர உரையாடல் மற்றும் சகவாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசிய ஜம்இய்யாவின் தலைவர் அவர்கள், சிக்கலான உலகில் பல்லின சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வு மற்றும் அமைதியை மேம்படுத்துவதில் ஜம்இய்யா மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான பணிகளையும் சுட்டிக் காட்டினார்கள்.

2023.10.26 அன்று ஐ.நா பொதுச்சபையினால் பலஸ்தீன் காஸா தொடர்பாக நிறைவேற்றப்பட்ட உடனடி மற்றும் நீடித்த மனிதாபிமான போர் நிறுத்த தீர்மானத்தைப் பாராட்டி ஐ.நா வின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டேரஸ்/க்கு ஜம்இய்யாவின் உத்தியோகபூர்வ கடிதம் ஒப்படைக்கப்பட்டது.

சிவில் உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதாபிமான சர்வதேச சட்டங்களை நிலைநிறுத்துவதை வலியுறுத்துவதோடு காஸாவில் மனிதாபிமான பணிகள் தொடர்வது, அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படுவது, அத்தியாவசிய பொருட்கள், சேவைகள், நிவாரணங்கள், சிவில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக குறித்த தீர்மானம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2023.11.03 ஆம் திகதி ஜம்இய்யாவின் தலைவர் அவர்களால் நிகழ்த்தப்பட்ட ஜும்ஆ உரைக்கான ஏற்பாடுகளை ஜெனீவாவில் அமைந்துள்ள UHRC அமைப்பின் தலைவர் சகோதரர் முயிஸ் வஹாப்தீன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பேருவளை பிராந்திய எழுத்தாளர் ஒன்றியம் ஏற்பாட்டில் தர்காநகரில் விருத்தமேடை கவிதை செயலமர்வு



(பேருவளை பி.எம். முக்தார்)

பேருவளை பிராந்திய எழுத்தாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த ”விருத்தமேடை” கலாநிதி அல் அஸூமத்தின் கவிதை குறித்த கலந்துரையாடல் நிகழ்வு கடந்த 05ஆம் திகதி தர்காநகர் அல்-ஹம்ரா மகா வித்தியாலயக் கேட்போர்கூடத்தில் அதன் தலைவர் றபீஸ் ஹம்ஸா தலைமையில் நடைபெற்றது.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களை கவிதை எழுதுவதில் ஊக்குவிக்கும் நோக்குடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பேருவளை பிராந்திய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்கள், இளம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பங்குபற்றினர்.

கவிதை எழுதுவது எப்படி? கவிதை எழுதுவதற்கான நுணுக்கங்கள், வசனங்களிலிருந்து கவிதை தன்னை வேறுபடுத்திக் காட்டும் விதம், புதுக்கவிதையிலுள்ள படிமங்கள், குறியீடுகள் என அல்அஸூமத் தனது இரு மணிநேர உரையில் விரிவான, தெளிவான விளக்கங்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பங்குபற்றுனர்களின் கவிதை குறித்த தங்களது சந்தேகங்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது கலாநிதி அல் அஸூமத் ஒன்றிய நிர்வாகிகளால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதன்போது, தர்காநகர் கவிஞர் ஸபா எழுதிய Snow Rain என்ற ஆங்கிலக் கவிதை நூல் அல் அஸூமதுக்கு கையளிக்கப்பட்டது.

நிகழ்சிகளை கவிஞர் பஸ்லி ஹமீத் தொகுத்து வழங்க, தலைவர் ரபீஸ் ஹம்ஸா வரவேற்புரையும் கவிஞர் தர்காநகர் ஸபா அறிமுக உரையும் நிகழ்த்தினார்கள்.

## அபாயா வழக்கு விவகாரத்தில் பாரிய திருப்பம்:

# பாடசாலைகளில் அபாயா ஆடை அணியத் தடையில்லை: மேன் முறையீட்டு நீதிமன்றம் கொழும்பில் சிறப்புத் தீர்ப்பு

(ஐ.ஏ. காதிர் கான்)

ஷண்முகா அபாயா விவகாரத்தில் ஆசிரியை பஹ்மிதா றமீஸ், மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த எழுத்து மூல (Writ) வழக்கு (07.11.2023) முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் சிறப்புத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

”தனது கலாச்சார ஆடையோடு பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்” என, ஆசிரியை பஹ்மிதா, மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்து மூல (Writ) வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அதேநேரம், தனது அரச கடமையைப் பொறுப்பேற்கச் சென்ற வேளை அதனைத் தடுத்தமைக்கு எதிராக, ஷண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக குற்றவியல் வழக்கொன்றையும், திருகோணமலை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

பாடசாலை அதிபர் சமூகமும், ”ஷண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு அபாயா அணிந்து வரத் தடையில்லை” என்ற உத்தரவாதத்தை தந்ததைத் தொடர்ந்து, அதிபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, சமரச அடிப்படையில் முடிவுக்கு வந்ததிருந்தது.

எனினும், நீதவான் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தின் பிரகாரம், குறித்த பாடசாலையினை மாத்திரமே இவ்விவகாரம் கட்டுப்படுத்துவதாக இருந்தது.

ஆனால், கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்ற இது தொடர்பிலான வழக்கில், பிரதி வாதிகளான கல்வி அமைச்சு, கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், ஷண்முகா அதிபர், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர், அரசைப் பிரதி நிதித்துவப்படுத்திய சட்டமா அதிபர் திணைக்களம் என்பன, ”பாடசாலைகளில் அபாயா அணிந்து செல்வதில் எந்தத் தடையும் இல்லை” என்ற உத்தரவாத்தினை எழுத்து மூலம் தந்ததை அடுத்து, இவ்வழக்கு தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இந்த முடிவின் பிரகாரம், ”இலங்கையில் இருக்கும் எப்பாடசாலைகளிலும் முஸ்லிம் பெண்கள் அபாயா அணிந்து செல்வதற்குத் தடையில்லை” என்பது, குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

இச்சிறப்பு வழக்கில், சிரேஷ்ட சட்டத்தரணி விரான் கொரேயா, ”குரல்கள் இயக்கத்”தின் சட்டத்தரணி ராஸி முஹம்மத் மற்றும் சட்டத்தரணி ருடானி ஸாஹிர் ஆகியோர் (07.11.2023) ஆஜராகி இருந்தனர்.

இவ்வழக்கு விவகாரம் சிறப்பாக வெற்றியடையும் வரை, பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு ஆதரவாக, ”குரல்கள் இயக்கம்” (Voices Movement) ஆரம்பம் முதல் போராடி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்றில் சூடுபிடித்த கிரிக்கெட் விவகாரம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கை கிரிக்கட் சபையை பதவி நீக்க வேண்டும் என்ற பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 2023.11.09 ஆம் திகதி இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவால் மும்மொழியப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக ஆளும் கட்சி அமைச்சர் நிமல் சிரிபால டி. சில்வா வழிமொழிந்து ஆதரவு தெரிவிக்கப்பட்டது. காலை 10.00 மணி முதல் நடைபெற்ற விவாதத்தின் பின்னர் மாலை 5.30 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி தரப்பு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு என்பதால் வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இந்த பிரேரணையின் அடுத்த கட்டமாக நீதிமன்றத்திற்கு அதுபற்றி அறிவித்து அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள கிரிக்கட் சபைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு நீக்கப்பட வேண்டும். அதன் பின்னரே சம்மி சில்வா தலைமையிலான முன்னைய இடைக்கால கிரிக்கட் சபை பதவி துறக்கும் நிலை எற்படும்.

இலங்கை கிரிக்கட் சபை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதியால் ஆத்துடன் ஊழல்களும் மோசடிகளும் மலிந்துள்ள கிரிக்கட் சபையை பாதுகாக்கும் வகையில் தீர்ப்பு வழங்கிய மேன்முறையீட்டு தலைமை நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை ஒன்றை கொண்டு வந்து அவரை பதவி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சியின் உறுப்பிர் லக்ஷ்மன் கிரியெல்ல வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் அதிகமான நீதிபதிகள் நேர்மையாகவும் சுயாதீனமாகவும் செயற்படுகின்ற நிலையில் இவ்வாறான ஒருசில நீதிபதிகளின் நடத்தையால் ஒட்டுமொத்த நீதித்துறைக்கும் அவப்பெயர் ஏற்படுகின்றது. அதனால் இந்த நீதிபதி தொடர்பில் அரசியல் அமைப்பின் பிரிவு 107 இற்கமைவாக பாராளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் என்று சிறைச்சாலைகள் மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் ஊழல்கள், மோசடிகள் நிறைந்த இலங்கை கிரிக்கட் சபையை கலைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆளும் கட்சி தரப்பில் இருந்து அமைச்சர் நிமல் சிரிபால டி. சில்வா வழிமொழிந்து ஆதரவு தெரிவித்து 2023 நவம்பர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பின்றி ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் ஆதரவில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்படி நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்தரவை பெற்றுள்ள அதே கிரிக்கட் சபையை கலைக்க வேண்டும், பதவி நீக்க வேண்டும் என்று சட்டவாக்க சபை தீர்மானம் நிறைவேற்றி இருப்பதானது நீதித்துறையின் நடவடிக்கைகளை ஒருவகையில் சவாலுக்குட் படுத்துவதாக கருத முடிகின்றது. ஏற்கனவே கிரிக்கட் சபை தொடர்பாக மேன்முறையீட்டு படு தோல்வியை சந்தித்த இலங்கை அணி அந்த தோல்வி மூலம் எந்தவிதமான படிப்பினைகளையும் பெறாத நிலையில் 2023 உலக கிண்ண போட்டிகளில் களமிறங்கி இவ்வாறு தோல்வியை சந்தித்தமை ரசிகர்களது ஆத்திரத்திற்கு பிரதான காரணமாக அமைகின்றது.

இந்த தோல்வியைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கட் ரசிகர்கள்




கொழும்பில் அமைந்துள்ள இலங்கை கிரிக்கட் சபை (ஸ்ரீ லங்கா கிரிகட் நிறுவனத்தின்) முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி அதிருப்தியை வெளியிட்டனர். அதன் எதிரொலியாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க விஷேட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்ட பின்னர் ஸ்ரீ லங்கா கிரிகட் சபையின் இடைக்கால நிர்வாக சபையை பதவி நீக்கம் செய்துவிட்டு இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் 07 பேர்களைக் கொண்ட புதிய சபையொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்தார். அமைச்சரின் இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து ஸ்ரீ லங்கா கிரிக்கட் நிறுவனத்தின் இடைக்கால சபையின் தலைவர் சம்மி சில்வா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அமைச்சருக்கும் இடையில் கருத்து மோதல் உருவாகியதோடு அதன் எதிரொலியை 2023.11.08 ஆம் திகதி பாராளுமன்றத்திலும் அவதானிக்க முடிந்தது.

அதனால் 2023.11.08 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய போது சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சி கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததோடு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடை உத்தரவால் இலங்கையின் கிரிக்கட்டின் எதிர்காலம் மேலும் இருள்மயமாக போகின்றது என்று கவலை தெரிவித்தது. எதிர்க்கட்சித் தலைவர் கருத்து தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற 225 உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து தற்போதைய நிலையில் பதவியில் இருக்கின்ற ஸ்ரீ லங்கா கிரிகட் நிறுவனத்தின் சபையை செயலிழக்கச் செய்யும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். இந்த பிரேரணையை நிறைவேற்ற ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் விளையாட்டுத் துறை அமைச்சருக்கு ஆதரவை வழங்க வேண்டும். அதன் மூலம் இலங்கையின் கிரிகட்டின் எதிர்காலத்தை பாதுகாக்க முடியும் அர்ப்பணிப்பும், பங்களிப்பும் பொறுப்புணர்ச்சியும் காரணமாக அமைகின்றது. இலங்கை கிரிக்கட் அணி உலக கிண்ண போட்டிகளில் பங்குபற்றுவதற்கும் தகுதிகாண் போட்டிகளை சந்தித்தே முன்னேற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஏற்கனவே திறமைகளை வெளிப்படுத்தி தகுதிகாண் நிலை இல்லாமல் முன்னேறும் 08 அணிகளில் ஒரு அணியாக இடம்பெற தவறிவிட்டது.

உலக கிண்ண போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட 09 போட்டிகளில் குறைந்தபட்சம் 05 போட்டிகளில் வெற்றிபெற்று 10 புள்ளிகளுடன் அதி உயர்வான ஓட்ட வீதத்தை பெற்றிருந்தால் அரை இறுதிக்கு முன்னேறும் என்று எதிர்பார்த்த அனைவருக்கும் பலத்த ஏமாற்றமே கிடைத்தது. இவ்வாறான தொடர் தோல்வியே இந்த விவகாரம் பாராளுமன்றம் வரையில் வரும் அளவிற்கு நிலைமையை மோசமாக்கியது எனலாம்.

அதே போன்று உலக கிண்ண போட்டிகளில் 07 ஆவது ஸ்தானம் வரையில் இடங்களை தக்கவைத்துக்கொள்ளும் ஏழு அணிகளே 2024 ஆம் ஆண்டு நடைபெறும் ரி 20 உலக கிண்ண தொடரிலும் நேரடியாக பங்குபற்றும் வாய்ப்பை பெறுகின்றன. இலங்கை அணிக்கு உலக கிண்ண தொடரில் பங்குபற்றிய அணிகளுக்கான தலா 09 போட்டிகளில் இலங்கை அணியால் இரண்டு போட்டிகளை மாத்திரமே வெற்றிபெற்று 04 புள்ளிகளை பெற முடிந்திருக்கின்றது. இறுதியாக 12 ஆம் திகதி நடைபெற்ற நியுசிலாந்துடனான போட்டியிலும் தோல்வி கண்டதால் 07 ஆவது ஸ்தானத்தையும் இழந்து ரி 20 போட்டிகளில் பங்குபற்றவும் தகுதிகாண் போட்டிகளை சந்திக்க வேண்டிய நிலைக்கு பின்னடைவு கண்டிருக்கின்றது. குறிப்பாக சொல்வதாக இருந்தால் புதிதாக கிரிக்கட் உலகில் அறிமுகமாகிய அப்கானிஸ்தான் அணியை விட அடிமட்ட நிலைக்கு இலங்கை அணி தள்ளப்பட்டிருப்பது கிரிக்கட் ரசிகர்களுக்கு மிகுந்த கவலையளிப்பதாக இருக்கின்றது.





அதனால் ஒருபுறம் கிரிக்கட் சபையின் ஊழல்களை ஒழிப்பது போன்று இலங்கை அணியின் திறமையை எவ்வாறு வளர்ப்பது, திறமையான வீரர்களை எவ்வாறு கண்டுபிடித்து அணிக்குள் சேர்ப்பது, பந்து வீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என்று முத்துறைகளிலும் பிரகாசிக்கும் வீரர்களை உட்படுத்துவது என்ற விடயங்கள் மிகவும் முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாகும். அத்துடன் ஏற்கனவே கிரிக்கட் அணியில் ஒரே தமிழனாக முத்தையா முரளீதரன் விளையாடினார். ஆனாலும் ஒரு முஸ்லிம் வீரரை இலங்கை அணியில் சேர்க்காமல் இருப்பது இலங்கை முஸ்லிம் கிரிக்கட் ரசிகர்கள் மத்தியில் அதிருப்தியையும் விரக்தி நிலையையும் ஏற்படுத்தியுள்ள விடயமாகும்.

உலகில் முதல் தர கிரிக்கட் ஜாம்பவான்களாக இருந்து வரும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நெதர்லாந்து உட்பட பல ஐரோப்பிய அணிகள் கூட முஸ்லிம் வீரர்களை தெரிவு செய்து அணியில் சேர்த்துள்ள நிலையில் இலங்கை அணியில் ஒரு முஸ்லிம் வீரராவது இல்லாமை பெருங்குறைபாடாகும். அதனால் இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர், கிரிகட் சபை, தெரிவுக்குழு ஆகியன கூடுதல் கவனம் செலுத்தி தமிழ் மற்றும் முஸ்லிம் வீரர்களையும் உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போன்று கிரிக்கட்டில் அரசியல், சூதாட்டத்திற்கு அடிமையாதல் போன்ற நிலைகளில் இருந்து பாதுகாத்து தேசத்திற்காக விளையாடும் அணியாக இலங்கை கிரிக்கட்டை மாற்றியமைக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது.

இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் கிரிக்கட் சபையை கலைக்கும் வகையிலான விளையாட்டுத் துறை அமைச்சர் ரொசான் ரணசிங்கவின் அறிவித்தலை ஆட்சேபித்து கிரிக்கட் சபையின் தலைவர் சம்மி சில்வா தாக்கல் செய்த மனுவிற்கு ஆதரவாக அமைச்சரின் தீர்மானத்திற்கு இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டது. அத்துடன் அமைச்சரால் கிரிக்கட் சபையை கலைக்கும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடை நிறுத்தவும் உத்தரவிடப்பட்டது. அதன்படி அமைச்சரால் புதிதாக நியமிக்கப்பட்ட கிரிக்கட் சபை செல்லுபடியற்றது என்று முடிவாகியது.

இந்த தடை உத்தரவை கடுமையாக விமர்சித்த அமைச்சர் ரொசான் ரணசிங்க பாராளுமன்றத்தில் அவருக்கு இருக்கின்ற சிறப்புரிமையை பயன்படுத்தி மேன்முறையீட்டு தலைமை நீதியரசர் பந்துல கருணாரத்னவின் நடவடிக்கைகளை விலாசித் தள்ளினார். கடுமையாக விமர்சித்தார். கிரிக்கட் சபைக்கு ஆதரவாக தலைமை நீதியரசர் செயற்படுவதாகவும் அவருக்கும் சம்மி சில்வா குடும்பத்திற்கும் தொடர்பு இருந்து வருவதாகவும் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக கருத்து தெரிவித்தார். அதனால் மக்கள் அனைவரும் நம்பிக்கை வைத்திருக்கின்ற நீதித்துறையின் ஆதிக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பாக சந்தேகங்கள் எழுவதாகவும் குற்றம் சாட்டினார். நீதிமன்ற தலைமை நீதியரசர் வழங்கிய தீர்ப்பானது பக்கசார்பானது என்றும் அமைச்சர் மாத்திரமன்றி மேலும் சில உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

எவ்வாறாயினும் பாராளுமன்றம் நீதித்துறையால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றை அல்லது உத்தரவை ஆட்சேபித்து அதற்கு எதிராக பிரேரணையொன்றை நிறைவேற்றியமையானது இந்நாட்டின் நீதித்துறைக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமைவதாகவும் சட்டவாக்க சபைக்கும் நீதித்துறைக்கும் இடையிலான முரண்பாட்டிற்கு வழிவகுக்கும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது.

இந்தியாவில் நடைபெற்று வருகின்ற 2023 உலக கிண்ண கிரிக்கட் போட்டித் தொடரின் 2023 நவம்பர் 02 ஆம் திகதி நடைபெற்ற இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான போட்டியில் இலங்கை கிரிக்கட் அணி 19.4 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்து படுதோல்வி கண்டது. இந்த தோல்வியுடன் உலக கிண்ண போட்டித் தொடரில் இலங்கை அணி அரை இறுதிக்கு முன்னேறும் என்று எதிர்பார்ப்புடன் இருந்த இலங்கை கிரிக்கட் ரசிகர்களின் கனவும் தவிடு பொடியாகியது. ஏற்கனவே ஆசிய கிண்ண கிரிக்கட் போட்டியில் இறுதிப் போட்டியில் இந்தியாவுடன் இதே போன்று 52 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்து மனுவொன்றை தாக்கல் செய்து 2023.11.07 ஆம் திகதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட புதிய சபைக்கு எதிராக நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவொன்றை பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராக பதவி ஏற்றிருந்த முன்னாள் அமைச்சரும் கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவருமான அர்ஜுன ரணதுங்க அவரது பதவியை இராஜினாமாச் செய்தார். இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கை கிரிகட் விளையாட்டுக்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கியகரமான நிலைமை தொடர்பாக ஊடகங்கள் கடுமையான விமர்சனங்களையும் அதிருப்தியை வெளியிட்டதால் தற்போதைய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை, தெரிவுக் குழு உட்பட முன்னைய செயற்பாடுகள் அனைத்திற்கும் எதிராக ரசிகர்கள் கிளர்ந்தெழுந்து ள்ளனர். அதன் எதிரொலி பாராளுமன்றத்திலும் ஒலிக்கத் தொடங்கியது. அதே நேரம் இவ்விடயம் அமைச்சரவையில் ஆராயப்பட்ட போது அமைச்சர் இவ்வாறான ஒரு நடவடிக்கை எடுத்தமை பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதுவும் தெரியாது என்றும் இவ்விடயத்தில் விளையாட்டுத் துறை அமைச்சர் ஜனாதி பதியுடன் கலந்தாலோசிக்க வில்லை என்று அதிருப்தி தெரிவித்திருந்தார். அதனால் நிலைமை மேலும் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. அதன் பின்னர் ஜனாதிபதிக்கும் விளையாட்டுத் துறை என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கிரிக்கட்டில் அரசியலை கலக்க முற்படுவதாக குற்றம் சாட்டினார். குறிப்பாக தேசிய பாதுகாப்பு மற்றும் பொலீஸ் அமைச்சர் டிரான் அலஸ் அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவை சாடுவதாகவே நடந்து கொண்டார். ஆனாலும் முழு நாடும் இலங்கையின் கிரிக்கட்டிற்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கி நிலைமை குறித்து கவலையில் இருக்கின்ற நிலையில் கிரிக்கட் சபைக்குள் கடுமையான ஊழல்கள் இடம்பெற்றிருப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் பாராளுமன்றத்தில் பொறுப்புணர்ச்சியுடன் தகவல்களை வெளியிட்ட பின்பும் இந்த பிரேரணையை ஆளும் கட்சி தரப்பினர் எதிர்த்தால் குறித்த கிரிக்கட் சபைக்குள் இடம்பெற்றுள்ள ஊழல்களை ஆளும் கட்சி அனுமதிப்பதாக நாட்டிற்கு விளங்கி விடும்,

எதுவானாலும் இலங்கை கிரிக்கட் அணி கடந்த நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. இந்த பின்னடைவுகளுக்கு வெறுமனே கிரிக்கட் சபை மாத்திரம் காரணம் என்று கூற முடியாது. கிரிக்கட் தெரிவுக்குழு, பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களும் முக்கிய காரண கர்த்தாக்களாவர். அதுமட்டுமல்லாமல் களத்தில் இறங்கி விளையாடும் 11 வீரர்களின்

# பலஸ்தீன் விடுதலை "தேசிய சமாதான மாநாடு"












பாலஸ்தீன விடுதலையை வலியுறுத்தியும், பாலஸ்தீன அப்பாவிகள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் காட்டுமிராண்டித் தனமான இன அழிப்பை நிறுத்தக் கோரியும் கொழும்பில் We are one அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய சமாதான மாநாடு" நேற்று மாலை கொழும்பு, ஹைட் பார்க்க மைதானத்தில் நடைபெற்றது.

கொட்டும் மழையிலும் திரண்டிருந்த பெரும் மக்கள் கூட்டத்தில் பௌத்த, இந்து, கிருஸ்தவ, இஸ்லாமிய மத குருமார்கள், அனைத்து கட்சிகளின் தலைவர்கள் அனைத்து இன, மதங்களை சேர்ந்த பொதுமக்கள், ஆளும், எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்திய தலைவர்கள் என பெருந்திரலான மக்கள் பங்கெடுத்தனர்.

இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில்,

முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிரிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் ஆ, ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி ஷம்பிக்க ரணவக்க ஆ, ளுதுட, ஆ க்களான வேலுகுமார், இம்ரான் மஹ்ரூப், இஷாக் ரஹ்மான், எரான் விக்ரமரத்ன, சந்திம வீரக்கொடி, திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாஷ ிம், பௌசி, காதர் மஸ்தான், விஜேத ஹேரத், இலங்கை கம்பியூனிச கட்சியின் செயலாளர், இலங்கை பாலஸ்தீன நற்புறவுச் சங்கத்தின் தலைவர் பிமல் ரத்னாயக்க, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், மு.க ஆ ஹரீஸ், முன்னாள் மேல் மாகாண ஆளுனர் அஸாத் சாலி, தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் சாணக்கியன் இராசமாணிக்கம், தேசுபு கட்சித் தலைவர் அப்துர் ரஹ்மான், மவ்பிம ஜனதா கட்சி தலைவர் திலித் ஜயவீர, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பொதுச் செயலாளர் அர்க்கம் நூராமித், IDM பல்கலைக் கழக நிறுவனர் ஜனகன் விநாயகமூர்த்தி மற்றும் முஸ்லிம் சமூக பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு உரையாற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

# அரையிறுதி போட்டிகள் புதனன்று ஆரம்பம்




2023 உலகக் கோப்பை தொடர் தற்போது இறுதிக் கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது.இதுவரை 44 போட்டிகள் நடைபெற்றுள்ளன.இதன் மூலம் அட்டவணையில் முதல் நான்கு இடத்தில் உள்ள அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

நான்காவது இடத்தைப் பிடிப்பதற்கான கடும் போட்டி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து என இம் மூன்று அணிகளுக்கிடையே நிலவியது. எனினும் ரன்ரேட் அடிப்படையில் நியூசிலாந்து முன்னிலையில் இருப்பதால் அரையிறுதி வாய்ப்பு அவர்களுக்கு பிரகாசமானது. தங்களது கடைசி லீக் போட்டியில் இலங்கையை 171 ஓட்டங்களுக்குள் மடக்கி 25 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது.

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றாலும் அரையிறுதிக்கு தகுதிபெறும் வாய்ப்பு சொற்பமாகவே இருந்தது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு காணப்பட்டது. ஏறக்குறைய அரையிறுதி வாய்ப்பு பாகிஸ்தானுக்கு மங்கிவிட்டாலும், அதிசயம் நிகழ்ந்தால் மட்டுமே அரையிறுதிக்கு செல்ல முடியுமென இருந்தது.

அதாவது, பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாடினால் இங்கிலாந்தை 287 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்த வேண்டும். அல்லது இரண்டாவதாக துடுப்பாடும் பட்சத்தில் இங்கிலாந்து நிர்ணயிக்கும் இலக்கை 2.3 ஓவர்களில் அடித்துவிட வேண்டும்.எனினும், பாகிஸ்தான் நாணய சுழற்சியில் தோல்வியடைந்ததால் இந்த வாய்ப்பு நழுவ விடப்பட்டது.

அரையிறுதி திகதி அறிவிப்பு!

நவம்பர் 15, 2023: வான்கடே மைதானத்தில் 1 வது அரையிறுதிஇந்தியா மற்றும் நியூசிலாந்து.

நவம்பர் 16, 2023: ஈடன் கார்டனில் 2வது அரையிறுதி தென் ஆப்ரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா.

இறுதிப்போட்டி நவம்பர் 19 ஆம் திகதி இடம்பெற உத்தேஷிக் கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.